# வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள் 2017

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

இவ்வறிக்கை 12 ஆம் திகதி செப்தெம்பர் மாதம் 2002 ஆண்டு பொது நிதிகள் திணைக்களம் வெளியிட்ட 402 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | நோக்கு, குறிக்கோள் | i |
| | அமைச்சின் தொழிற்பாடுகள் | ii |
| **அத்தியாயம் 1 – அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்** | | |
| 1.1 | அறிமுகம் | 1 |
| 1.2 | அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு | 2 |
| 1.3 | அமைச்சில் உள்ள பிரிவுகள் | 3-7 |
| **அத்தியாயம் 2 – அபிவிருத்திக் கருத்திட்டங்கள்** | | |
| 2. | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 8 |
| 2.1 | சுற்றுலாவுக்கான கவர்ச்சி மிக்க இடங்களை மேம்படுத்தல் | 9-34 |
| 2.2 | சுற்றுலாத்துறை மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் | 34-36 |
| 2.3 | சமூக சுற்றுலாத்துறை கிராமங்களை அபிவிருத்தி செய்தல் | 37 |
| 2.4 | சுற்றுலா அலுவல்களுக்காக புதிய இடமொன்றில் (Hot Spot) நடமாடும் பொலிஸ் பிரிவொன்றை விஸ்தரித்தல் | 38 |
| 2.5 | கொழும்பு சர்வதேச வர்த்தக விழா | 39 |
| 2.6 | கவர்ச்சிகரமான உயர் சுற்றுலாத்தளங்களுக்கான பிரசுரங்கள்இ வழிகாட்டிகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்களை மேம்படுத்தல் | 39 |
| 2.7 | சுற்றுலா ஹோட்டல்களை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் சலுகை வட்டியுடனான கடன் முறையொன்றை பெற்றுக்கொடுத்தல | 40 |
| **அத்தியாயம் 3 – நிதி பிரிவு** | | |
| 3.1 | நிதி செயற்பாடு -2017 | 41-43 |
| **அத்தியாயம் 4 – உள்ளக் கணக்காய்வுப் பிரிவு** | | |
| 4.1 | அறிமுகம் உள்ளக் கணக்காய்வு | 44 |

## அட்டவணைகள்


| அட்டவணை இல | விபரம் | பக்க இல |
| --- | --- | --- |
| 1.1 | 2017 ஆம் ஆண்டுக் காலத்தின் போது சமா்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் | 4 |
| 2.1 | புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2017 | 8 |
| 2.2 | விருந்தோம்பல் துறையில் இளைஞர்களைப் பயிற்றுவித்தல் -2017 | 35 |
| 2.3 | சுற்றுலாச் சேவை வழங்குநர்களுக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்சித் திடடம் -2017 | 36 |
| 2.4 | சுற்றுலா அலுவல்களுக்கான புதிய இடம் (Hot Spot) நடமாடும் பொலிஸ் பிரிவொன்றை விஸ்தரித்தல் | 38 |
| 3.1 | பொருத்தப்பாடு சட்டத்தின் கீழ் பயன்பாட்டுத் மொத்த ஒதுக்கீடுகள் 2017 | 39 |
| 3.2 | மொத்த வழங்குதல் | 42 |
| 3.3 | மொத்த வழங்குதல் திட்டங்கள் | 42 |
| 3.4 | மொத்த வழங்குதல் மீது பயன்பாடு | 42 |
| 3.5 | சொத்துக்கள் மேலாண்மை | 43 |
| 3.6 | அரச சேவையாளர்களின் "பி" முற்பணக்கணக்கு | 43 |
| 3.7 | பின்வருமாறு ஆண்டில் கடன் மற்றும் அட்வான்ஸ் வழங்குதல் | 43 |

| வரைபடம் இல | விபரம் | பக்க இல |
| --- | --- | --- |
| 1.1 | அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு | 2 |
| 1.2 | சிபாரிசு செய்யப்பட்ட வீசாக்கள் பற்றிய விபரம் | 5 |

## நோக்கு

மறக்கமுடியாத, உண்மையான, பல்லினத்துவம் வாய்ந்த சுற்றுலா அனுபவங்களுக்கான உலகத்தில் மிகச்சிறந்த தீவாக மதிக்கப்படுதல்

## குறிக்கோள்

சமூக ரீதியில் பிரத்தியேகமானதும் சுற்றாடல் ரீதியில் பொறுப்பு வாய்ந்ததுமான இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பிரதிபலிக்கும் அதிவிசேடமான சுற்றுலா அனுபவங்களையும் அதேநேரம் நாட்டிற்கும் மக்களுக்கும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கின்ற மிக உயர் பெறுமானமுடைய ஒரு சுற்றுலா தலமாக இலங்கையை விளங்கச்செய்தல்.

## நோக்கு (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ மக்களின் நலனுக்காக பணியாற்றுதல்

## குறிக்கோள் (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ சமயம் மற்றும் கலாசாரம் என்பவற்றின் விழுமியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் விருத்திச்செய்தல்.

## அமைச்சின் தொழிற்பாடுகள்

(2015.09.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்)

- கொள்கைகள் ,நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் விடயங்கள் தொடர்பிலும்,திணைக்களங்கள் நியதிச்சட்ட நிறுவகங்கள் ஆகியவற்றின் நோக்கெல்லையின் கீழான விடயங்கள் தொடர்பிலும் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வினைத் தொடர்தல்.

- கொள்கைகள் ,நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் விடயங்கள் தொடர்பிலும், திணைக்களங்கள் நியதிச்சட்ட நிறுவகங்கள் ஆகியவற்றின் நோக்கெல்லையின் கீழான விடயங்கள் தொடர்பிலும் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வினைத் தொடர்தல்.

- சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நியமங்களை வகுத்தல்.

- சுற்றுலா முகவர்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

- பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

- ஒரு நல்லொழுக்கமுடைய சமூகத்தைக் கட்டியெழுப்பும் இலக்கையுடைய மக்கள் கொண்டுள்ள அவர்களது மதம் சார்ந்த பெறுமானங்களைப் போதிக்கும் வகையில் கொள்கை,நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல் மேலும் அவற்றை கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.

- கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும்அவற்றைக் கண்காணித்தல்.

- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பில் அவதானமெடுத்தல்.

- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களை மேற்பார்வை செய்தல

## அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
2. இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம்
3. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
4. இலங்கை மாநாட்டுப் பணியகம்
5. கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்.

# அத்தியாயம் 1

## அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்

**1.1.** அறிமுகம்

**1.2.** அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு

**1.3.** அமைச்சில் உள்ள பிரிவுகள்

# 1. அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்

## 1.1 அறிமுகம்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2015 செப்டம்பர் 22 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. சுற்றுலாத்துறை தொடர்பிலான பொறுப்புக்களைக் கொண்டு தாபிக்கப்பட்ட இவ் அமைச்சின் பிரதான இலக்குகளுள், பொருத்தமான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகம் ஆகியவற்றை வகுத்தல் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் சுற்றுலாவுக்கான இலக்கு நாடாக இலங்கை ஊக்குவிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தல், மற்றும் அமைச்சின் கீழ் செயற்படும் நோக்கில் வர்த்தமானி மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் நிதிசார் மேற்பார்வை ஆகியற்றைப் பேணுதல் போன்றனவும் உள்ளடங்குகினற்ன.

இவ் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பின்வரும் திணைக்களங்களும் நியதிச்சட்ட முகவர் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன:

- கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
- இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்
- இலங்கை மாநாட்டுப் பணியகம்

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 71 ஆகக் காணப்படுகின்ற அதேவேளை, 2017.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு அமைச்சின் தற்போதைய ஆளணியினரின் எண்ணிக்கை 53 ஆகக் காணப்படுகிறது. இதற்கிணங்க உதவி மற்றும் தொழிற்பாட்டுத் தரங்களில் 18 வெற்றிடங்கள் தற்போது காணப்படுவதோடு, அவை பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் நிரப்பப்படவேண்டியவையாகும்.

பிரத்தியோக அலகாக சுற்றுலா பணிக்குழு நிறுவப்பட்டது. இந்த பணிக்குழு இலங்கையினை சிறந்த சுற்றுலா பயண இடமாக மாற்றுவதற்கும் இலங்கை சுற்றுலா உபாய திட்டத்தில் கூறிய சுற்றுலா அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடகவும்இ இலங்கை சுற்றுலா துறையின் பங்களிப்பினை தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கமுடியும்

**1.2 சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு** வரைவு- 1.1

## அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு.






விரிவாக்கம்: அ.உ- அபிவிருத்தி உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர், மு.உ- முகாமைத்துவ உதவி ... உ- அலுவலக உதவியாளர், த.தொ.தொ.உ-தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர், ஒ.ப.க- ஒளிப்படக் கலைஞ்ஞர், ஒ.உ-ஒளிப்பட உதவியாளர், நி.உ-நிதி உதவியாளர், சி/ஆ-சிங்களம் /ஆங்கிலம், த/ஆ: தமிழ் / ஆங்கிலம்.

## 1.3. அமைச்சின் பிரிவுகள்

அமைச்சானது பிரதானமாக நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு மேலும் நிதிப் பிரிவு ஆகியனவாகும்.

### 1.3.1 நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- பணியாளர்களை ஆட்சேர்த்தல், பணிக்கமர்த்துதல், பதவியுயர்த்தல் மற்றும் பதவி ஓய்வு.
- பணியாளர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்தல்.
- பணியாளர்களின் செயலாற்றுகைகளை மதிப்பிடுதல் மற்றும் அவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- பணியாளர்கள் தொடர்பான தரவுத்தளத்தினை பேணுதல்.
- ஒழுக்காற்று முகாமைத்துவம்
- ஊழியர் மனக்குறை பற்றிய முகாமைத்துவம்
- அரச நிறுவனங்களுடனான தொடர்பாடல் முகாமைத்துவம்
- துணைச் சேவைகள் மற்றும் பொருட்கொள்வனவு முகாமைத்துவம்
- விளைவுத்திறன் மேம்பாடு

### இப்பிரிவின் செயலாற்றுகை

#### i. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வின் கீழான ஆண்டுக்காலத்தின் போது, பணியாளர்களின் திறன், அறிவு மற்றும் ஆற்றல்களை வலுவூட்டும் நோக்கிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியிலான பயிற்சியளிப்புகளுக்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டது. உள்நாட்டுப் பயிற்சியளிப்பின் போது, 09 பணியாளர்களுக்கு தமது பணிகள் தொடர்பிலான ஒழுக்காற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மீளாய்வுக்கான ஆண்டின் போது, 13 பணியாளர்கள் வெளிநாட்டு ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் கலந்துகொண்டனர்.

#### ii. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

அமைச்சரவைக்கான 12 விஞ்ஞாபனங்கள் மீளாய்வுக்கான ஆண்டுக்காலத்தின் போது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கிய விடயங்கள் மற்றும் அவை தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆகியன பற்றிய விபரங்களை பின்வரும் அட்டவணை வழங்குகிறது:

2017 ஆம் ஆண்டுக் காலத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்
அட்டவணை- 1.1

| | தலைப்பு | அவை தொடர்பிலான அமைச்சரவைத் தீர்மானம் |
|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கும்புறுப்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைச் சொந்தமான 386.9 பேர்ச்காணியை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பாவித்தல் | நேரம் ஒதுக்கி வைக்கப்பட்டது |
| 02 | சுற்றலாதுறை சம்பந்தமாக இலங்கை மற்றம் ரஷ்யா அரசாங்கக்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் | அங்கீகரிக்கப்பட்டது |
| 03 | இலங்கை சுற்றுலா ஊக்கிவிப்பு பணியகத்தினால் உலகளாவிய ஊடக விளம்பரங்களுக்காக 2014 சித்திரை தொடக்கம் 2015 பங்குனி வரைக்கும் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் செலுத்துதல் | அங்கீகரிக்கப்பட்டது |
| 04 | பென்தொட்ட தேசிய ஓய்வு விடுதி புனரமைப்பு | ஏற்புடையதல்ல |
| 05 | ஆலோசகர் திரு.பீலிக்] ரொட்ரிகோ அவர்களின் சேவையை நீடிப்புச் செய்தல் | அங்கீகரிக்கப்பட்டது |
| 06 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். | அங்கீகரிக்கப்பட்டது. |
| 07 | அஹுங்கம பல்மன்ட் சுற்றலா விடுதியை கரையோரத்திலிருந்து 12 மீற்றர்கள் குறைப்பது மற்றும் ஆகக்கூடிய உயரம் 30 மீற்றர் ஆக்குதல் | அங்கீகரிக்கப்பட்டது. |
| 08 | இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக திரு. சுதேஷ் பாலசுப்பிரமணியத்தின் நியமனம் | அங்கீகரிக்கப்பட்டது. |
| 09 | 2017 ஆம் ஆண்டுக்கான அரச கிறி]தவ விழா திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கொண்டாடுதல் | அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பொது முகாமையாளராக திருமதி இனோஷினி பெரேராவின் நியமனம் | அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | தேசிய ஓய்வு விடுதியின் புதிய அபிவிருத்தியும் தரமுயர்த்தலும் | அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்தினால் 2018 ம் ஆண்டு டி[]ற்றல் முறை விளம்பரம் செய்தல் | அங்கீகரிக்கப்பட்டது. |

*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

### iii. கிறிஸ்தவ சமய அலுவல்கள் பிரிவு

மீளாய்வுக்கான ஆண்டுக்காலத்தில், சமய அனுஸ்டானங்களின் நிமித்தம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் வீசாவுக்காக விண்ணப்பித்த விண்ணப்பங்கள் தொடர்பில் அமைச்சினால் செயன்முறைப்படுத்தப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட வீசாக்கள் பற்றிய விபரம்

வரைவு- 1.2




*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

### iv நிதி மற்றும் கணக்கீட்டுப் பிரிவு

இந்தப் பிரிவானது அமைச்சின் நிதிசார்ந்த வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டதாகும். நிதிப் பிரிவானது நிதி சார்ந்த செயற்பாடுகள், சொத்துக்கள் முகாமைத்துவம், நிதிசார் அறிக்கையிடல்கள் மற்றும் தொழில்வாண்மைச் சேவைகள் ஆகியன உள்ளிட்ட அனேக உதவிச் சேவைகளை வழங்குகிறது. இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு,

- வருடாந்த வரவுசெலவுத் திட்ட வரைவு மதிப்பீட்டினை தயாரித்தல்.
- ஒதுக்கீட்டுக்கணக்குகளை தயாரித்தல்.
- வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்புச் செலுத்தல்
- அரச ஊழியர்களது 'பீ' கணக்குகளை தயாரித்தல்.
- நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.
- நிதிசார்ந்த அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல்.
- சொத்து முகாமைத்துவம்

### 1.3.2.உள்ளக் கணக்காய்வுப் பிரிவு

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவானது 2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் செயற்படத் தொடங்கியதுடன் அமைச்சுச் செயலாளரின் நேரடிக் பொறுப்பில் குசு 134(1) பிரகாரம் இயங்குகிறது.

### 1.3.3.அபிவிருத்திப் பிரிவு

#### i.அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்தி பிரிவானது மேலதிக செயலாளர் அபிவிருத்தியின் கீழ் இயங்கி வருகின்றது. இந்தப் பிரிவானது இத்துறையில் தொடர்புடைய முகவர்கள் மற்றும் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக அமைச்சின் வருடாந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளது. இப்பிரிவானது அரசாங்க அரச சார்பற்ற முகவர்களை ஒருங்கிணைத்து உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு முறையான சேவைகள் கிடைப்பதை உறுதி செய்து சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உதவுகிறது. சுற்றுலா அபிவிருத்தி இலக்கு, சுற்றுலாத்துறையில் நேரடி மறைமுக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஊக்குவிப்பை உறுதிசெய்தல். இந்த பிரிவின் செயற்பாடுகள் இருஉப அலகுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

இப்பிரிவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- அமைச்சின் தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் கையாளுதல்.
- அனைத்து சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் அமுல்படுத்தல் மற்றும் அக்கருத்திட்டங்களை அமுல்படுத்தும் வேளையில் எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான அறிவுரைகளை வழங்குதல்.
- சுற்றுலா அபிவிருத்தியில் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பினை வழங்கல்.
- சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகாளுக்கான புதிய வியூகங்களைவகுத்தல்
- ஈ-அரசாங்கக் கொள்கையினை அமுல்படுத்தல்.

#### ii. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

இது அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு சார்ந்த செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பிரிவாகும். திட்டமிடல் பிரிவானது சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சீரமைக்கப்பட்ட தேசிய அபிவிருத்திக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிப்பதில் ஒத்துழைப்பினையும் வசதிகளையும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இந்த இலக்கினை அடையும் நோக்கில், இப்பிரிவானது அரசாங்கத்தின் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒருங்கிணைத்து அவற்றுக்கு வசதியளிப்பதற்கான பாரிய வகிபாகத்தினை வகிப்பதோடு, தேசிய திட்டமில் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ஆகியவற்றுடனும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறது.

இதற்கிணங்க இப்பிரிவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- அமைச்சின் செயற்திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டுக்குமான திறைசேரி ஏற்பாட்டிற்கு ஏற்ப வகுக்கப்படுவதோடு, அக்குறித்த செயற்திட்ட இலக்குகள் அமைச்சின் கீழான நிறுவனங்களுக்கு அவற்றுக்குப் பொருத்தமான பணியிலக்குகளைக் கொண்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
- மாதாந்த/ காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் செயற்திட்டத்திற்கு இணங்க அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் குறித்தான காலாண்டு அடிப்படையிலான மீளாய்வினைப் பெறுதல். மேலும், முன்னேற்றம் பற்றிய மீளாய்வானது வருடாந்த செயற்திட்டம் குறித்தான காலாண்டுக்குரிய நிதி மற்றும் பௌதீக இலக்குகளுக்கு ஏற்ப நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

- விளைவு நோக்கிய மதிப்பீட்டுச் செயன்முறையினை கையாளுதல் மற்றும் அமைச்சின் ஒட்டுமொத்த வருடாந்த முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல்.
- அமைச்சின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தையும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினையும் தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்குச் சமர்ப்பித்தல்.
- திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அவற்றின் நோக்கெல்லையின் கீழான புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் மதிப்பீடு செய்து, அவற்றை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கும் சமர்ப்பித்தல்.

**இப்பிரிவின் செயலாற்றுகை**

- அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும் தயாரிக்கப்பட்டு அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.
- 2017 இற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
- மாதாந்த/ காலாண்டுக்குரிய முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
- 2017ஆம் ஆண்டிற்கான அமைச்சின் திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- மூன்று முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் சம்பந்தப்பட்ட முகவர்களுடன் இடம்பெற்றன.

# அத்தியாயம் 2

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

2. அபிவிருத்தி திட்டங்கள்

2.1 சுற்றுலாவுக்கான கவர்ச்சி மிக்க இடங்களை மேம்படுத்தல

2.2 சுற்றுலாத்துறை மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்

2.3 சமூக சுற்றுலாத்துறை கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

2.4 சுற்றுலா அலுவல்களுக்காக புதிய இடமொன்றில் (Hot Spot) நடமாடும் பொலிஸ் பிரிவொன்றை விஸ்தரித்தல்

2.5 கொழும்பு வர்த்தக விழா

2.6 கவர்ச்சிகரமான உயர் சுற்றுலாத்தளங்களுக்கான பிரசுரங்கள்இ வழிகாட்டிகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்களை மேம்படுத்தல்

2.7 சுற்றுலா ஹோட்டல்களை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் சலுகை வட்டியுடனான கடன் முறையொன்றை பெற்றுக்கொடுத்தல்

## 2. அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை வினைத்திறன் மிக்க முறையில் ஈட்டும் ஆற்றலைக் கொண்ட முதனிலை தொழிற்துறையொன்றாக சுற்றுலாத்துறையே திகழ்கின்றது. எனவே, எதிர்காலத்தில் சுற்றுலாத்துறையின் துரித வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பானது அதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தியைக் கொண்டு நிறைவுடன் காணப்படவேண்டியது அவசியமாகும்.

2017 இன் வரவுசெலவுத்திட்டத்திற்கு ஏற்ப, சுற்றுாலத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது எழு புதிய கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா. 728.18 மில்லியன் தொகையினை ஒதுக்கியது.

அக்கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு,

அட்டவணை: 2.1

| இல. | அபிவிருத்திக் கருத்திட்டங்கள | ஒதுக்கீடு (ரூ.மில்) | மீள் ஒதுக்கீடு (ரூ.மில்) | **மொத்த செலவினம்** (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| | **மூலதனச் செலவு** | | | |
| 01 | சுற்றுலாக் கவர்ச்சிமிக்க இடங்களை அபிவிருத்தி | 568.00 | 568.00 | 162.28 |
| 02 | சுற்றுலாத்துறைக்கு மனித மூலதனத்தை அபிவிருத்தி | 25.00 | 25.00 | 18.92 |
| 03 | இல்ல விருந்தோம்பல் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 25.00 | 25.00 | 0.55 |
| 04 | சுற்றுலா வலயங்களில் நடமாடும் பொலிஸ் பிரிவொன்றை வியாபித்தல். | 50.00 | 50.00 | 41.86 |
| 05 | MICE (ஒன்றுகூடல், ஊக்குவித்தல்கள், மாநாடு நடத்துதல் மற்றும் காட்சிப்படுத்தல்) ஐ ஏற்படுத்தும் வகையிலான உட்கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தல் ** | 1,000.00 | 0.00 | |
| 06 | நீர் வழி போக்குவார்த்துக்கான இறங்குதுறைகளை மேம்பாடுகள்(மிரிச, ஹிக்கடுவ) ** | 100.00 | 0.00 | |
| 07 | தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தகவல் நிலையம் உருவாக்கல் ** | 100.00 | 0.00 | |
| | **உப மொத்தம்** | **1,868.00** | **668.00** | **223.63** |
| | **மீண்டுவரும் செலவு** | | | |
| 08 | கொழும்பு வர்த்தக விழா | 50.00 | 50.00 | 29.50 |
| 09 | கவர்ச்சிகரமான உயர் சுற்றுலாத்தளங்களுக்கான பிரசுரங்கள், வழிகாட்டிகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்களை மேம்படுததல் | 10.00 | 10.00 | 5.48 |
| 10 | சுற்றுலா ஹோட்டல்களை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் சலுகை வட்டியுடனான கடன் முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் | 500.00 | 0.18 | 0.18 |
| | **உப மொத்தம்** | **560.00** | **60.18** | **35.16** |
| | **முழு மொத்தம்** | **2,428.00** | **728.18** | **258.79** |

*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

மேலே குறிப்பிடப்பட்ட இல. (05) (06) (07) மற்றும் (10) ஆகிய கருத்திட்டங்கள் அமைச்சின் கட்டுப்பாட்டினையும் விஞ்சிய காரணத்தினால் அவற்றை இவ்வாண்டுக் காலத்தில் அமுல்படுத்த முடியாமற்போனது. அமைச்சரவை முடிவு 11 யூலை 2017 பிரகாரம் நிதி அமைச்சினைல் நிதி மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்டது

## 2.1. சுற்றுலாவுக்கான கவர்ச்சி மிக்க இடங்களை மேம்படுத்தல்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை வினைத்திறன் மிக்க முறையில் ஈட்டும் ஆற்றலைக் கொண்ட முதனிலை தொழிற்துறையொன்றாக சுற்றுலாத்துறையே திகழ்கின்றது. எனவே, எதிர்காலத்தில் சுற்றுலாத்துறையின் துரித வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பானது அதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தியைக் கொண்டு நிறைவுடன் காணப்படவேண்டியது அவசியமாகும்.

இத்தகைய சூழமைவில், 2017 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாகாணங்களிலும் சுற்றுலாத்துறை சார்ந்த அம்சங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ரூபா. 568.00 மில்லியன் தொகையானது ஒதுக்கப்பட்டுள்ளது.

### கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்:

- கிராமியப் பிரதேசங்களில் சுற்றுலாப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதனை மைய அவதானமாகக் கொண்டு நாட்டின் சுற்றுலாத் துறையில் நீடித்து நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதிசெய்தல்.

- கிராமியச் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கிலான கிராமிய சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல்

- நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புக்களை உருவாக்கி வர்த்தக இயக்குனர்களுக்கான வருமானத்தை அதிகரித்தல்.

- வருகையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தினுள் வருகையாளர்களின் செலவினை அதிகரித்தல்.

- பல்வேறுபட்ட கலாசாரங்கள் பற்றிய புரிந்துணர்வினை மேம்படுத்தல் உள்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்.

- குறைவாக அறியப்பட்ட சுற்றுலாக் கவர்ச்சி இடங்களை அபிவிருத்தி செய்தல்.

### அமுல்படுத்தல் பற்றிய ஏற்பாடுகள் :

2017 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது இனங்காணப்பட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் கீழே குறிப்பிடப்பட்ட மாகாணசபைகள்/ மாவட்டச் செயலகங்கள்/ அரச முகவர்கள் ஆகியவற்றுடன் பணியாற்றி வருகிறது.

- பிரதம செயலாளர், வடமத்திய மாகாணம்
- பிரதம செயலாளர், சப்ரகமுவ மாகாணம்
- பிரதம செயலாளர், வடமாகாணம்
- பிரதம செயலாளர், மத்திய மாகாணம்
- பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்
- பிரதம செயலாளர், தென் மாகாணம்
- மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்
- மாவட்டச் செயலாளர், புத்தளம்
- மாவட்டச் செயலாளர், மொனரகல
- மாவட்டச் செயலாளர், குருணாகல்
- மாவட்டச் செயலாளர், கண்டி
- மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு

## 2.1.1 அனுராதபுரம் மாவட்டம்

2017 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் மூன்று கருத்திட்டங்களுக்காக ரூபா. 40.14 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

i. **இசுருமுனி விகாரையில் துப்பரவாக்கல் வசதிகள்**

ii. **குத்தம்பொகுண மற்றும் சமதிபிலிமய வாகனத் தரிப்பிடத்திற்கு அருகாமை ஆகியவற்றுக்கிடையில் துப்பரவாக்கல் வசதிகள்**

**அறிமுகம்:**

அனுராதபுரம் புனித நகரமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வருகையாளர்களைக் கவர்ந்து வருவதோடு, பெருமளவான சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்து வருகின்றது. எனவே, மின்சாரம், நீர், சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாடு போன்ற அத்தியவசிய வசதிகளை இப்பிரதேசத்தில் நிர்மாணிப்பது மிகவும் இன்றியமையாத விடயமாகும்.

**குறிக்கோள்:**

- ❖ முறைமை சார்ந்த துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதன் மூலம் இப்பிரதேசத்திற்கு வருகை தருவோரது எண்ணிக்கையை அதிகரித்தல்.

**விளைவு:**

- ➢ இசுரமுனி விகாரை, குத்தம்பொகுண, சமதிபிலிமய ஆகிய பிரதேசங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வருகையாளருக்குக் கிடைக்கும் வகையில் துப்பரவேற்பாட்டுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ➢ இந்த பாரிய மாநகரசபையில் சுகாதார நிலைமையினை மேம்படுத்தல்.

**2017 இல் ஒதுக்கீடு** : ரூபா. 25.58 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 12.42 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்**: பிரதம செயலாளர், வடமத்திய மாகாணம்

iii. **நுவரவெவ குளக் கட்டுக்கான நடைபாதையை நிர்மாணித்தல்**

**அறிமுகம்:**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கான வசதிகளை வழங்கும் வகையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அனுகூலமளிக்கும் நோக்கிலான நடைபாதை/ துவிச்சக்கரவண்டிப் பாதை ஒன்று நுவரவெவ குளக்கட்டில் தாபிப்பதற்கான நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்துக்கு 2016 ரூபா 18.23 மில்லியன ஒதுக்கப்பட்டது.

**குறிக்கோள்:**

- ❖ பாதை தாபித்தலுடன் நகரை தூய்மையாகவும் பசுமையாகவும் அழகுறப் பேணுதல்.

**விளைவு:**

- ➢ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எழில்மிக்கதும் நட்புநேயம் கொண்டதுமானதொரு சூழலில் நடைப்பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலானதொரு சௌகரியம் மிக்க நடைபாதை மற்றும் சைக்கிள் ஓட்டப் பாதை தாபிக்கப்பட்டது.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 14.56 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 8.25 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், வடமத்திய மாகாணம்

## 2.1.2 மட்டக்களப்பு மாவட்டம்

2017 ஆம் ஆண்டில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு கருத்திட்டகளிற்கு ரூ. 26.63 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

### i.ஏறாவூர் களப்பு பிரதேசத்தினை அழகுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல்.

**அறிமுகம்:**
சுற்றுலாத் துறையினை கிழக்கு மாகாணத்தில் அபிவருத்தி செய்துகொண்டு வருகின்றது. அதிகமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தினை பார்ப்பதற்காக நாளாந்தம் வருகை தருகின்றனர். சுற்றுச்சூழல் பயணம் எனப்படுவது சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பிரதேச மக்களின் நலனோம்புகையினை மேம்படுத்துவதற்காக, இயற்கையாகவுள்ள இவ்வாறான இடங்களுக்கு பயணிப்பதாகும். இயற்கை வளப் பாதுகாப்பு மேற்கொள்ளப்படுவதோடு, அவ்வாறான வளங்களின் நிலையான பயன்பாட்டினை இலக்காகக் கொண்டு, சுற்றுலாத்துறை பயணமொன்றாக ஏறாவூர் களப்புடனான பிரதேசத்தினை அபிவிருத்தி செய்வது இக் கருத்திட்டத்தின் நோக்கமாவதோடு, பிரதேச மக்களுக்களுக்கு பொருளாதார நன்மைகளை வழங்குவதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**நோக்கம்:**

- இயற்கை வளங்களை நிலையாக பயன்படுத்துவதை இலக்காக் கொண்டு சுற்றுலாத்துறைப் பயணமொன்றாக ஏறாவூர் களப்பு பிரதேசத்தினை விருத்தி செய்தல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிப்பதோடு, உயர் தரத்திலான ஓய்வுபெறும் இடங்களை தாபித்தல்.
- தனித்துவமான சூழல் கலாசார வளங்கள் மற்றும் பொழுதுபோக்குடன் கூடிய சுற்றுலாத்துறையின் அனுபவம் மற்றும் திருப்தியினையும் அதிகரித்தல்.

**விளைவு:**
பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்தல் மற்றும் நிலையானதான பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கல்.

**2017 இல் ஒதுக்கீடு**: ரூ.12.13 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 8.15 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்** : பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்

### ii. ஏறாவூர் கடற்கரை மேம்படுத்தல்.

**அறிமுகம்:**
ஏறாவூர் பற்றுப் பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாகும். இப் பிரதேசமானது ஓய்வையும் உற்சாகத்தையும் நாடும் எல்லா பயணிகளையும் கவர்ந்திழுக்கும் ஒரு பிரதேசமாகும். இத் தீவில் கடற்கரைகளில் சூரிய தரிசனம் மிகவும் அற்புதமான கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதுடன், இலங்கையில் ஒவ்வொருவரும் நீண்ட விடுமுறையைக் சந்தோசமாக கழிப்பதற்கு கடற்கரைப் பகுதிகள் வாய்ப்பை வழங்குகிறது. மகிழ்ச்சிகரமான இடங்களும் சமுத்திரத்தின் இரைச்சலும் பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்துவது இதன் குணாம்சமாகும். இலங்கையில் உள்ள பல அழகிய கடற்கரைகளில் கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள ஏறாவூர் பற்று கடற்கரையும் ஒன்றாகும். இக் கருத்திட்டமானது அப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் உட்கட்டமைப்பு வசதிகளையும் உள்ளூர் சுற்றலா பயணிகளையும் அதிகம் கவர்வதற்கு உதவும்.

**நோக்கம்:**

- பசுமைச் சூழல்இ பொழுது போக்கு அம்சங்களை மேம்படுத்தல்.
- சிறு நடுத்தர தொழில்துறைகளை ஊக்கிவித்தல்
- தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதலும் வருமான வழிகளை மேம்படுத்தலும்
- கிராமப்பற சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்

**விளைவு:**
பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்தல் மற்றும் நிலையானதான பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கல்.

**2017 இல் ஒதுக்கீடு**: ரூ.14.50 மில்லியன்

**செலவீனம் :** ரூபா. 3.51 மில்லியன்

**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றுக் கொண்டிருக்கின்றது

**அமுல்படுத்தும் முகவர்** : மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு

### 2.1.3 காலி மாவட்டம்

காலி மாவட்டத்தில் மூன்று கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூபா. 8.48 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் தென் மாகாண சபையினால் அமுல்படுத்தப்படுகின்றன.

**i. அக்குரல கடற்கரை பகுதியில் பிரசித்திபெற்ற நீராடும் தடாகம் அமைந்துள்ள பிரதேசத்தில் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்கும் நடமாடும் சேவைகள் பிரிவொன்றை தாபித்தல்.**

**அறிமுகம்:**

இலங்கையில் பிரபல்லியமான கடற்கரை பிரதேசங்கள் அமைந்துள்ளபோதிலும், பிரபல்லியமற்ற கவர்சியான கடற்கரை பிரதேசங்களும் காணப்படுகின்றன. அக்குரல கடற்கரை பிரதேசமும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கையான நீராடும் தடாகமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களின் மனதைக் கவரக்கூடிய பிரபல்லியமான கவர்ச்சியான கடற்கரை பிரதேசமாகும்.

அதற்கமைய தென் கடற்கரை பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியகூறுகள் அதிகமாகவுள்ள அக்குரல கடற்கரை பிரதேசம் மற்றும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கையான நீராடும் தடாகத்தை அபிவிருத்தி செய்து ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நீராடும் தடாகம் அமைந்துள்ள இடத்தில் உடை மாற்றும் இடமொன்றும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்கும் நடமாடும் சேவைகள் பிரிவொன்றும் முக்கியமாக தாபிக்கப்பட வேண்டும்.

**நோக்கம்:**

- ❖ அக்குரல கடற்கரை பிரதேசத்திற்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றலாப் பயணிகளுக்குத் தேவையான பொது வசதிகளையும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளையும் வழங்குவதன் மூலம் அவர்களின் திருப்தியை அதிகரித்தல்.
- ❖ தென் மாகாணத்தில் பிரபல்லியமற்ற சுற்றுலாத்துறையைக் கவரக்கூடிய இடங்களை பிரபல்லியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- ❖ சுற்றுலாப் பயணிகளை நீண்டகாலம் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவர்களிடமிருந்து கிடைக்கும் வருமானம் மாகாணத்தினுள் பிரிந்துசெல்லக்கூடியவாறு சுற்றுலாத்துறையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**விளைவுகள்:**

- ➢ அக்குரல கடற்கரை பிரதேசம் சுற்றுலா முடிவிடமாக அபிவிருத்தியடைதல்.
- ➢ சுற்றாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக பொருளாதார பிரதிலாபங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

**2017 இல் ஒதுக்கீடு** : 2.81 மில்லியன் ரூபா.

**செலவீனம் :** ரூபா. 0.56 மில்லியன்

**பௌதீக முன்னேற்றம் :** நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது

**அமுல்படுத்தும் முகவர்** : பிரதான செயலாளர், தென் மாகாணம்

**ii.ஹிக்கடுவ சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான பிரதான திட்டமொன்றைத் தயாரித்தல்**

**அறிமுகம்:**

இந்த அமைச்சு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து ஹிக்கடுவ பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய அலுவலாக ஹிக்கடுவ கடற்கரை பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அதற்கான பிரதான திட்டமொன்றை தயாரிப்பதற்கான ஆரம்ப கட்டமாக அத்துறைக்கான நிலஅளவை திட்டமொன்றை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நோக்கம்:**

- ❖ முறையான திட்டமொன்றுக்கு அமைய இணைந்த முறையின் கீழ் ஹிக்கடுவ கடற்கரை பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல்
- ❖ நிலஅளவை திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களை பயன்படுத்தி பிரதான திட்டத்தை தயாரித்தல் .
- ❖ நகர அபிவிருத்தி அதிகார சபை உட்பட்ட ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கருத்திட்டத்தை செயற்படுத்தல்

**விளைவுகள்**

- ➢ ஹிக்கடுவ கடற்கரை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிலஅளவை திட்டத்தைத் தயாரித்தல்
- ➢ கடற்கரை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான பிரதான திட்டத்தை தயாரித்தல்

**2017 இல் ஒதுக்கீடு**: 0.17 மில்லியன் ரூபா

**செலவீனம்** : ரூபா. 0.17 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்** : பிரதான செயலாளர், தென் மாகாணம்

**iii. அம்பலன்கொட-கொடஹேன-மாதம்பாவில சரணாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

**அறிமுகம்**

அம்பலாங்கொடை மற்றும் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நடுவில் அமைந்துள்ள மாதம்பாவில, சுற்றுலாத்துறைசார்ந்த தோற்றுவாய்களைக் கொண்ட உயிரியல் பல்லினத்தன்மையைக் கொண்ட பிரசித்தியற்ற சுற்றுலாப் பயண முடிவாகும். இந்த ஈரநில சுற்றாடலில் உயிரியல் பல்லினத் தன்மை மற்றும் கவர்ச்சியான கடொலான தாவரங்கள் காணப்படுவதால், சுற்றாடல் மற்றும் இயற்கைவளங்கள் அமைச்சினால் 2007 செப்தெம்பர் 21 ஆம் திகதியுடைய 1515/21 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குளத்தைச் சுற்றியுள்ள அழகான கடொலான தாவரங்கள் சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவர்ந்து வருவதுடன் வனசீவராசிகளை பார்வையிடுவதற்கான விசேட இடமாகவும் அமைந்துள்ளது. அதற்கமைய இவ் வலயத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கிடையே பிரபல்லியப்படுத்துவதற்காக மாதம்பாவில பிரதேசத்தில் நடமாடுபவர்களுக்கு சாதகமான முறையில் அங்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**நோக்கம்:**

- ❖ கொடஹேன மற்றும் மாதம்பாவில சரணாலயங்களை இணைக்கும் வகையில் போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக மிதக்கும் தளமொன்றை நிர்மாணித்தல்
- ❖ சுற்றாடலை பார்வையிடும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நிலையமொன்றை நிர்மாணித்தல்
- ❖ சுற்றாடலை பாதுகாத்து மாதம்பா குளத்தை அண்டிய பிரதேசத்தில் சுற்றுலா அலுவல்களை மேம்படுத்தல் மற்றும் உயிரினங்களுக்கு வாழ்வதற்கு உகந்த சுற்றாடலை கட்டியெழுப்புதல்

**விளைவுகள்:**

- ➢ சரணாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் நடமாடும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்களையும் வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் இயலுமை
- ➢ சரணாலயத்திற்கு பாதுகாப்பாக பிரவேசிக்கும் முறைமையொன்று அமைதல்
- ➢ இலங்கையினுள் சுற்றாடல் சார்ந்த நடமாட்டங்களை ஊக்குவித்தல்.

**முதலீடு** : ரூபா 5.50 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 1.10 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது

**அமுல்படுத்தும் முகவர்** : பிரதான செயலாளர், தென் மாகாணம்

## 2.1.4 யாழ்ப்பாணம் மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒன்பது கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூபா. 74.97 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் மற்றும் வட மாகாண சபை ஆகியவற்றினால் அமுல்படுத்தப்படுகின்றன.

### I. ஓய்வெடுத்தல் வசதிகளின் பொழுதுபோக்குப் படகு உலா- யாழ் நகர்

### அறிமுகம்

இக்கருத்திட்டமானது யாழ் நகரில் உள்ள தீவுகளில் ஓய்வெடுத்தலுக்கான மற்றும் பொழுதுபோக்குப் படகு உலாக்களை அபிவிருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டதாகும். மேலும் இக்கருத்திட்டமானது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதை மாத்திரமல்லாது தொழில்வாய்ப்புக்களையும் உருவாக்கும் வகையில், அரச மற்றும் தனியார்த் துறையினரின் பங்களிப்போடு வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்துக்கு 2016இல் ரூபா 30.00 மில்லியன ஒதுக்கப்பட்டதுடன் திட்டமானது நிறைவு பெற்றுவிட்டது

### குறிக்கோள்கள்

- ❖ பொழுதுபோக்குப் படகு உலாக்களை தாபித்தல
- ❖ சுற்றுலாத்துறையின் உள்நாட்டு மூதலீடுகளை ஊக்குவித்தல்
- ❖ சுற்றுலாத்துறையை நோக்காகக் கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துகொள்வதோடு, புதிய தொழில்களையும் உருவாக்குதல்.

### விளைவு:

- ➢ பொழுதுபோக்கு சார்ந்த நிகழ்வுகளை நிறுவுதல் வியாபாரங்களுக்கான (அரச, தனியார் பங்களிப்புகளிப்புகளுடான)
- ➢ சம்பந்தப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளில் உள்ளூர் சமுதாயத்தினரின் பங்களிப்புகளை ஊக்குவித்தல்
- ➢ பெருமளவு கலாசார மற்றும் இயங்கை சார்ந்த வளங்கள் ஊக்குவிக்கப்பட்டு பேணப்படுதல்.
- ➢ யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்நாட்டு/வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் காலப்பகுதினை அதிகரித்தல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 25.54 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 25.54 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்

## ii. யாழ்ப்பாணம், தீவுபகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மையத்தை அபிவிருத்தி செய்தல்(மண்டைதீவு)

### அறிமுகம்

யாழ்ப்பாண நகரமானது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா சார்ந்த சிறந்த வசதிகளை மேம்படுத்துவத்கான இலக்கினைக் கொண்ட நகரமாகவிருப்பதே, யாழ்ப்பாணம், தீவுபகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் நோக்கமாகும். இத்திட்டத்துக்கு 2016இல் ரூபா 46.00 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் திட்டமானது நிறைவு பெற்றுவிட்டது

### குறிக்கோள்

- ❖ சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலா அபிவிருத்தியூடாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்துகொள்ளல்.
- ❖ தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- ❖ புதிய சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்.
- ❖ புதிய சுற்றுலா கலாச்சரத்தை உருவாக்குதல்

### விளைவு:

- ➢ புதிய சுற்றுலாத்துறை சார்ந்த பொழுதுபோக்குப் பிரதேசங்களின் எழுச்சி
- ➢ கலாசார மற்றும் இயற்கை சார்ந்த கணிசமான அம்சங்களை உயர்த்துதல்.
- ➢ எதிர்கால பொருளாதார நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு மக்களை வலுவூட்டல்

**2017 இல் ஒதுக்கீடு**: ரூபா. 26.76 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 26.76 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்

## iii. கச்சைதீவுப் பிரதேசத்தில் மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல்

### அறிமுகம்

கச்சைதீவானது இலங்கையின் வட பிராந்தியத்தில் அமைந்துள்ளது. இத் தீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயமானது மிகவும் பிரபல்யம் வாய்ந்த யாத்திரைக்குரிய இலக்கு இடமாகும். வருடந்தோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் இந்தி யாத்திரைஎர்கள் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக பெப்ரவரி மாதத்தில் வருகை தருகின்றனர். எனவே, இதனை ஒரு சுற்றுலாவுக்கான இலக்கு இடமாகக் கருத்திற்கொண்டு, இப்பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதிகளை பெற்றுக்கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை வழங்கி உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். இத்திட்டத்துக்கு 2016 ரூபா 4.55 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் 2017இல் திட்டமானது நிறைவு பெற்றுவிட்டது.

### குறிக்கோள்

- ❖ ஐந்து மலசலகூடகத் தொகுதிகளை நிர்மாணித்தல்.

### விளைவு:

- ➢ தீவின் சுத்தமான சூழல்

**2017 இல் ஒதுக்கீடு** : ரூபா. 2.28 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 2.27 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்

## iv. நெடுந்தீவு, மணல்துறையில் இளைப்பாறும் இடத்திற்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல் (கட்டம்-II)

### அறிமுகம்

நெடுந்தீவானது யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அமைந்துள்ள ஒரு தீவாகும். நெடுந்தீவுக்குச் செல்லக் கூடிய ஒரேயொரு வழி படகின் மூலம் மட்டுமாகும். இதனை நெருங்குவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கும் மேலதிகமான காலம் எடுப்பதோடு குறைந்த வசதிகளை அடங்கப்பெற்றதாகும். இத் தீவானது சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய பல இடங்களை உள்ளடக்கியிருப்பதாயினும் இரவைக் கழிப்பதற்காக அடிப்படை வசதிகள் அடங்கிய எந்தவொரு இடமும் காணப்படவில்லை. அத்தோடு, களைப்பாறுவதற்காக எந்தவொரு இடமும் இல்லை. அதன் காரணமாக, நெடுந்தீவில்

(மணல்துறை) ஓய்வெடுப்பதற்காக அத்தியாவசியமான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவது மிக முக்கியமானதாகும்.

**குறிக்கோள்கள்**

- மணல்துறை ஓய்விடத்தின் மண்டபத்தில் தங்குவதற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்காக உயர் தரத்திலான சேவையை வழங்கும் நோக்கில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல்.

**விளைவுகள்:**

- சுற்றுலாப் பயணிகளுக்காக உயர் தரத்திலான சேவையை வழங்க கூடிய இளைப்பாறும் இடமாக அமையும்

**ஒதுக்கீடு** : ரூபா. 2.50 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.50 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், வடமாகாணம்

**v. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய யாத்திரிகைகளுக்காக ஓய்வு மண்டபமொன்றை நிர்மாணித்தல்.**

**அறிமுகம்:**
மாவிட்டபுரம், யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குரித்தான புனித கிராமமொன்றாகும். நகுலேஸ்வர சிவன் கோயிலுக்காக பிரசித்திபெற்றுள்ளதோடு பலாளி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் கீரிமலை கடற்கரைக்கு அண்மையிலே அது அமைந்துள்ளது. மாருதபுர வீகவல்லி எனும் சோழ இளவரசிக்கு இருந்த குதிரை முகத்தினை, அவள் நகுலேஸ்வர கோயிலில் பிரார்த்தனை செய்த போது மனித முகமாக உருமாற்றம் பெற்ற பின்னர் நகுல சுவாமியின் அறிவுரைக்கமைய, கோயிலின் நீரூற்றில் நீராடிய அவ்விடத்தினையே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்த சோழ இளவரசியினால் தமது நாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட முருகன் தேவி சிலையொன்றை பரிசாக வழங்கப்பட்டது.

**நோக்கம்:**

யாத்திரிகைகளுக்காக ஓய்வு மண்டபமொன்றை நிர்மாணித்தல்.

**விளைவுகள்:**
பயணிக்கின்ற யாத்திரிகைகளுக்காக ஓய்வெடுக்கும் வசதிகளை மேம்படுத்தல்.

**ஒதுக்கீடு** : ரூபா. 5.00 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 2.39 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலகம், யாழப்பாணம்

**VI கச்சதீவு தீவிற்காக இறங்குதுறையொன்றை நிறுவுதல்**

கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயம் புகழ்பெற்ற ஒரு புனித வழிபாட்டிடமாகும். ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதத்தில் இந்த தேவாலயத்தில் நடைபெறுகின்ற விழாவிற்காக பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் இந்தியர்கள் வருகை தருகின்றனர். ஆலயத்தின் பூசைகள் நடைபெறுகின்ற வேளையில், இலங்கை கடற்படை மற்றும் தனியார்துறை மூலம் போக்குவரத்திற்காக படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால் இறங்குதுறையொன்றை நிறுவுவதன் மூலம் பாதுகாப்பாக மக்களை கொண்டு செல்வதற்கும், தரையிறங்குவதற்கும் மேடையாக அமைகின்றது.

**நோக்கம்:**

கச்சதீவு யாத்திரிகர்களுக்காக பாதுகாப்பாகவும், இலகுவாகவும் சென்றுவரக்கூடியதான வசதிகளை வழங்கல்.

**விளைவுகள்:**
பக்தர்களின் போக்குவரத்து பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

**ஒதுக்கீடு** : ரூபா. 2.50 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 2.49 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலகம், யாழப்பாணம்

**vii. பொது வாகனங்களை நிறுத்திவைக்கும் வசதிகள் மற்றும் அக்கறை கடற்கரையில் நிழல் தரக்கூடியதான கூடாரங்களை அமைத்தல்.**

**அறிமுகம்:**
வடக்கு கரையோரத்தின் அழகினை இரசிப்பதற்காக அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அக்கறை கடற்கரையில் சிறுவர் பூங்காவொன்று, சுகாதார வசதிகள் அடங்கிய ஏனைய அடிப்படைய வசதிகள் இதுவரையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. எனினும் பொது வாகனத் தரிப்பிடமொன்று அவசியமாக இருப்பதோடு, அக்கறை கரையோரத்தினை மேம்படுத்துவதற்காக நிழலுடன் கூடிய கூடார வசதிகளை ஏற்படுத்தல்.

**நோக்கம்:**

- பாதுகாப்பான வாகனத் தரிப்பிடத்திற்கான வசதிகளை திட்டமிடல்.
- சுற்றுலாப் பயணிகளுக்காக கரையோரத்தில் அமருவதற்காகவும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் போதியளவான வசதிகளை செய்து கொடுத்தல்.

**விளைவுகள்:**

- அக்கறை கடற்கரையோரம் சுற்றுலாத்துறை இடமொன்றாக அபிவிருத்தி செய்தல்.
- பிரதேச மக்களின் தொழிவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தல்.

**ஒதுக்கீடு** : ரூபா. 3.00 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.60 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், வடமாகாணம்

**viii.கந்தரோடையினையும் அதனைச் சுற்றியுள் பிரதேசத்தினையும் அபிவிருத்தி செய்தல்**

கந்தரோடை, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் சுன்னாகத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு உப நகரமாகும். ஒன்றுக்கொன்று நெருங்கிய தாது கோபுரக் குழுமம் இங்கு காணப்படுகின்றது. 5 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட 78 தாது கோபுரங்கள் இந்த பிரதேசித்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. முதலாவது அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட சேர் போல் பீரிஸினால், 1916 ஆம் ஆண்டில் இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. அகழ்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தினுள் சிறிய அளவிலான 50 ஸ்தூபிகள் (ஸ்தூப) கண்டெடுக்கப்பட்ட இந்தப் பிரதேசம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றலாப் பயணிகளுக்கிடையே பிரபல்யமடைந்துள்ளதோடு அவர்களுக்கு தேவையான வசதிகளையும் வழங்குவதும் அவசியமாகவுள்ளது.

**நோக்கம்:**
01.வாகனங்களை தரித்து வைப்பதற்காக பாதுகாப்பான வசதிகளை ஏற்படுத்தல்.
**02.** பக்கச் சுவர் மற்றும் மேடை அமைத்தல்
**03.** விருந்தினர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக கரையோரத்தில் உட்காருவதற்காகவும் சுதந்திரமாக இருப்பதற்கும் போதியளவான இடவசதிகளை அமைத்துக் கொடுத்தல்.

**விளைவுகள்:**
சுற்றுலா நட்புச் சூழலொனறினை கந்தரோடையினை விருத்தி செய்தல

**ஒதுக்கீடு :** ரூபா. 5.00 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 0.00 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### ix. கீரிமலை மாறும் அறை சீரமைப்பு

**கீரிமலை கிராமம் யாழ்ப்பாண தீபகற்பத்தில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. புனித குளம் மற்றும் நாகுலேஸ்வரன் கோவில் ஆகியவற்றால் புகழ் பெற்றது. கீரிமலை குளம் ஒரு புதிய நீர் குளம், இது கடலில் இருந்து சில அடி தூரத்தில் அமைந்துள்ளது. தொட்டி கடலுக்கு நெருக்கமாக இருந்தாலும், தண்ணீர் உப்பு உண்டாவதில்லை, ஏனெனில் இது ஒரு நிலத்தடி நீரை நீரில் இருந்து வருகிறது. கீரிமலை நீரூற்று கனிமங்களில் நிறைந்துள்ளது மற்றும் அதன் குணப்படுத்தும் பண்புகளுக்கு புகழ் பெற்றது. ஆகவே கீரிமலை பகுதியில் அத்தியாவசிய** சேவைகளை நிறைவு படுத்த வேண்டும் என்பது அவசியமாகும்.

**நோக்கம்:**

**ஆண்களுக்**கான **ஆடை மாதிரியான அறைக**ளின் வசதிகளை மேம்பாடுத**ல்**

**விளைவுகள்:**

**கீரிமலை** பற்றிய **மேம்படுத்தப்பட்ட மதிப்பு** உயரும்

**ஒதுக்கீடு :** ரூபா. 2.40 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 0.48 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்: பிரதம செயலாளர், வட மாகாண சபை**

## 2.1.5 கண்டி மாவட்டம்

கண்டி மாவட்டத்தில் ஐந்து கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூபா. 32.24 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் கண்டி பிரதேச செயலகம் மற்றும் மத்திய மாகாண சபை ஆகியவற்றினால் அமுல்படுத்தப்படுகின்றன.

### i. கடலாதெனிய ரஜமகா விகாரை அமைந்துள்ள பிரதேசத்தின் சுற்றுலாத்துறை கவர்ச்சியை அதிகரித்தல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்**

கம்பளை இராசதானி காலத்துக்குச் சொந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடலாதெனிய விகாரை கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. நான்காம் புவனேகபாகு அரசனின் காலத்தில் அரசின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த விகாரையை பார்வையிடுவதற்காக நாளாந்தம் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் (பாடசாலை மாணவர்கள், வெளிநாட்டவர்கள், உள்நாட்டு யாத்திரிகள், பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகளில் ஈடுபடுபவர்கள்) வருகை தருகின்றார்கள்.குறிப்பிட்ட இடத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பல கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கான மொத்த ஆகுசெலவு 29.55 மில்லியன் ரூபா ஆகும்.

### a. கடலாதெனிய ரஜமகா விகாரை அமைந்துள்ள பிரதேசத்தின் சுற்றுலாத்துறை கவர்ச்சியை அதிகரித்தல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

**நோக்கம்:**

- சுற்றுலாப் பயணிகளுக்கான நவீன வசதிகளைக் கொண்ட துப்பரவு ஏற்பாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்.
- சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தகவல் மற்றும் வழிகாட்டல் தொடர்பான பெயர் பலகைகளை பொருத்துதல்.

**விளைவுகள்:**

- சுற்றுலாப் பயணிகளுக்கான துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை பெற்றுக்கொடுத்தல்
- சரியான தகவல் தொடர்பாடல்

**ஓதுக்கீடு :** ரூபா. 2.70 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 2.60 மில்லியன்
**பௌ தீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், கண்டி

**b. கடலாதெனிய ரஜமகா விகாரை அமைந்துள்ள பிரதேசத்தின் சுற்றுலாத்துறை கவர்ச்சியை அதிகரித்தல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

**நோக்கம்:**

- ❖ சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வாகனங்கள் நிறுத்தும் யாட் ஒன்றை நிர்மாணித்தல்

**விளைவுகள்:**

- ➢ முறையாகவும் பாதுகாப்பாகவும் வாகனங்களை நிறுத்தும் இயலுமை

**ஓதுக்கீடு :** ரூபா. 7.10 மில்லியன்
**செலவீனம் :** கையிறுப்பில் உள்ள பற்றுச்சீட்டு
**பௌ தீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

**c. கடலாதெனிய ரஜமகா விகாரைசார்ந்து நடாத்தப்படும் பெரஹெரா பயண வழியை அபிவிருத்தி செய்தல்**

**அறிமுகம்:**

இலங்கையில் நடைபெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார பெறுமதியை வெளிப்படுத்தும் கண்டி ஸ்ரீ தளதா மாளிகையின் பெரஹெராவை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் பிராந்திய பெரஹெராக்களுள் கடலாதெனிய விகாரையைச் சேர்ந்த விஷ்ணு தேவாலயத்தின் பெரஹெரா முக்கிய இடத்தை வகிக்கின்றது. வருடாந்தம் நடைபெறும் இந்த பெரஹெராவை பார்வையிடுவதற்காகவும் தெய்வ ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பெருந்தொகையானவர்கள் வருகை தருகின்றார்கள். பெரஹெரா நடைபெறும் பிரதான பாதையான தேவாலய வீதியானது இவ் வரலாற்று முக்கியத்துவமுடைய விகாரைக்கான முக்கியமான பிரவேச பாதையும் ஆகும். இவ் வீதி சேதமடைந்திருப்பதால் சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். 2016 ஆம் ஆண்டின் அமைச்சின் நிதி ஏற்பாடுகளைக் கொண்டு விகாரை அமைந்துள்ள வளாகத்தில் முன்னுரிமை வழங்கி நிறைவேற்றப்படவேண்டிய அபிவிருத்தி செயற்பாடாக குறிப்பிட்ட கருத்திட்டம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

- ❖ பெரஹெரா பயணிக்கும் பிரதான பாதையை அபிவிருத்தி செய்தல்

**விளைவுகள்:**

- ➢ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இவ் விகாரைக்கு பிரவேசிக்க இயலுமாதல் மற்றும் அவர்களுக்கு இலகுவாக பெரஹெராவை பார்வையிடும் வசதியளிக்கப்படல்.

**ஓதுக்கீடு :** ரூபா. 19.75 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 15.43 மில்லியன் (கையிறுப்பில் உள்ள பற்றுச்சீட்டு)
**பௌ தீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

## ii. கண்டி, கதரகம தேவாலயவில் துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் குடிநீர் விநியோகக் கருத்திட்டம்

**அறிமுகம்**

கதரகம தேவாலய என்பது கண்டி தலதா மாளிகையின் நான்கு பிரதான தேவாலயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இப்பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான பொது வடிகால் முறைமை மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 0.878 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்கள்:**

- ❖ வளாகத்தினுள் துப்பரவேற்பாட்டு வசதிகளை விருத்திசெய்தல் மற்றும் வடிகால் முறைமையினை சீரமைத்தல்.

**விளைவுகள்:**

- ➢ பார்வையாளர்கள் நேயம் கொண்டதொரு இடமாக கதரகம தேவாலயவை மேம்படுத்தல்

**ஓதுக்கீடு** : ரூபா. 0.19 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.18 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

**iii.நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் சுற்றுலாத்துறை சார்ந்த துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.**

**அறிமுகம்**

யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த முருதலாவ கிராமத்திலிருந்து குருகம வத்த வீதியின் வழியே இரண்டு கி.மீ வரை சென்றபின் மிக உயரமான இடத்தில் நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையம் அமைந்துள்ளது. பௌத்த நெறியை கற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எவருக்கும் நெல்லிகல பௌத்த நிலையத்தினால் சம்பந்தப்பட்ட வசதிகளும் நூலக வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் வணங்குவதற்கும் விவசாய பொருளாதார முறை மற்றும் கிராமிய சுற்றாடல் ஆகியவற்றை அனுபவிப்பதற்காகவும் இவ்விடத்தை எப்போதும் தேர்ந்தெடுக்கும் நிலை காணப்படுகின்றது. ஆகவே நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கான துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் கட்டாயம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

**நோக்கம்**

- ❖ வளாகத்தினுள் துப்பரவேற்பாட்டு வசதிகளை விருத்திசெய்தல் மற்றும் வடிகால் முறைமையினை சீரமைத்தல்.

**விளைவுகள்**

- ➢ பிரதேசத்தைச் சேர்ந்த குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதன் ஊடாக மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தல்.

**ஓதுக்கீடு** : ரூபா. 2.50 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.50 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

## 2.1.6 கேகலை மாவட்டம்

கேகாலை மாவட்டத்தில் ஒரு கருத்திட்டத்தின் முன்னெடுப்பதற்காக ரூபா.6.82 மில்லியன் ஓதுக்கப்பட்டது. இக்கருத்திட்டம் பிரதம செயலாளர், சப்ரகமுவ மாகாணத்தினால் அமுல்படுத்தப்படுகின்றன.

### i. பதலேகல குன்றினைச் சூழவுள்ள சுற்றுலாத்துறை சார்ந்த வசதிகளை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்:**

சப்ரகமுவ மாகாணத்தின் பிரதான நுழைவாயிலொன்றானதும் மாகாணத்தின் எல்லையுமான ரம்மியமான கடுகண்ணாவினையைக்கு அருகில் அமைந்துள்ள பல்லுயிரினம் வாழ்கின்ற உயர்தரமான பதலேகல மலைச் சாரலானது பைபில் குன்று என்று சுற்றுலாப் பயணிகளுக்கிடையே பிரபல்யமாகவுள்ளது. அடுத்த பக்கத்தில் சீகிரியாக் குன்றிற்கு சமமான வடிவமைப்பைக் கொண்டு பதலேகல மேட்டுநிலம் ‘‘சின்ன சீகிரியா’’ என்றும் குறிப்பிடப்படுகின்றது. இயற்கையாக அமைந்துள்ள கேகாலை மாவட்டத்தின் மாவனல்ல ஹத்கம்பல வீதியினூடாக இந்த இடத்தை சென்றடைய முடியுமாவதோடு கடல் மட்டத்திலிருந்து 2780 அடி உயரத்தில் இது அமைந்துள்ளது. இயற்கையாகவே மிகவும் அதிசயத்தக்க

வகையில் அமைந்துள்ள இந்த இடத்தை நோக்கி சமய, சுற்றுச் சூழல் மற்றும் சாகச விளையாட்டுக்களுக்கு எதிராக பிரயத்தம் கொண்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

**குறிக்கோள்கள்:**
- ❖ நுழைவுப் பாதை அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு கைப்பிடி வேலிகள் அமைத்தல்.
- ❖ வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதிகளைச் செய்தல்.

**முதலீடு:**
- ➢ பதலேகலவினைச் சுற்றி சுற்றுலா வசதிகளினை அபிவிருத்தி செய்தல்.

**ஒதுக்கீடு** : ரூபா. 6.82 மில்லியன்
**செலவீனம்** : ரூபா.1.36 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

## 2.1.7 குருநாகல் மாவட்டம்

குருநாகல் மாவட்டத்தில் நான்கு கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூபா.42.91 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் குருநாகல் பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்படுகின்றன.

### i. வரலாற்று சிறப்புடைய யாபஹ்வ புராதன ரஜமகா விகாரையை பௌதீக ரீதியில் அபிவிருத்தி செய்தல்.

**அறிமுகம்**

குருணாகல் மாவட்டத்தில் மஹவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பயிலிகம கிராமத்தில் அமைந்துள்ள யாபஹ்வ ரஜமகா விகாரை, முதலாம் புவநேகபாகுவின் ஆட்சிக் காலத்தில் புனித தந்த தாது வைக்கப்பட்டிருந்த இடமென அறிமுகப்படுத்த முடியும். தற்போது யாபஹ்வ இராசதானியை பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தினந்தோறும் அங்கு வருகைதருகின்றனர். ஆகவே உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடத்தின் பௌதீக வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**நோக்கம்:**
- ❖ சுற்றுலாப் பயணிகளுக்கான போதியளவு குடிநீர் வசதிகளும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளும்
- ❖ வரலாற்று சிறப்புடைய விகாரை அமைந்துள்ள பிரதேசத்தை ஒளிமயமாக்கல்

**விளைவுகள்:**
- ➢ வரலாற்று சிறப்புடைய யாபஹ்வ ரஜமகா விகாரை அமைந்துள்ள பிரதேசத்தில் பக்கதர்களுக்கான அத்தியாவசிய பௌதீக வசதிகள் அபிவிருத்தி
- ➢ சுற்றுலாப் பயணிகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்

**ஒதுக்கீடு** : ரூபா. 19.96 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 9.19 மில்லியன (கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை)
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், குருணாகல்

**ii. வரலாற்று முக்கியத்துவமுடைய ரிதீவிகாரையை சுற்றுலாத்துறையில் கவரக்கூடிய இடமாக அபிவிருத்தி செய்தல்**

**அறிமுகம்:**
குருணாகல் மாவட்டத்தில் ரிதீகம நகரத்திலிருந்து 2 கி.மீட்டர் தூரத்தில் இந்த வரலாற்று முக்கியத்துவமுடைய இடம் அமைந்துள்ளது. அரிசியால் தன்னிறைவடைந்த குளங்கள் நிர்மாணிக்கப்பட்ட நாட்டின் புனித பூமியாக ரிதீவிகாரை பூமியை அடையாளப்படுத்த முடியும். இது உடரட்டயில் அமைந்துள்ள ரஜமகா விகாரைகளுள் பெயர்பெற்ற விகாரையாகும். ஆய்வாளரின் கருத்துகளுக்கு அமைய இலங்கையிலுள்ள மிகப் பிரசித்திபெற்ற மகர தோரணம் அமைந்துள்ள இவ்விடத்தை பார்வையிடுவதற்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பெரும்பாலான சுற்றலாப்பயணிகள் தினந்தோறும் இங்கு வருகை தருகின்றார்கள். ஆகவே இப்பிரதேசத்து உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**நோக்கம்:**
- ❖ விகாரைக்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் வாகனங்களை நிறுத்துவதற்கான வாகன நிறுத்துமிடமொன்றை நிர்மாணித்தல்

**விளைவுகள்:**
- ➢ முறையாகவும் பாதுகாப்பாவும் வாகனங்களை நிறுத்திவைக்க முடியும்

**ஒதுக்கீடு :** ரூபா. 11.03 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 9.19 மில்லியன் (கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை)

**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது

**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், குருணாகல்

**iii.அரன்கலே தியான நிலையம் சார்ந்த உட்டகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம்**

**அறிமுகம்**
குருணாகல் மாவட்டத்தில் கணேவத்த பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த அரன்கலே கிராம உத்தியோகத்தர் வசத்தைச் சேர்ந்த மலியதேவ ஆரன்ய நிலையம் புராதன இடிபாடுகளைக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித பூமியாகும். இங்கு புராதன இடிபாடுகளை பார்வையிடல், புன்னியதானங்கள் மற்றும் தியான வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக குறிப்பிடத்தக்களவு பக்தர்களான சுற்றுலாப் பயணிகள் இவ்விடத்திற்கு வருகை தருகின்றார்கள். அதற்கமைய பௌதீக, புராதன மற்றும் கலாசார காரணிகளை அடிப்படையாக் கொண்டு இவ்விடத்தை சுற்றுலாத்துறை பயண முடிவிடமாக அபிவிருத்தி செய்வதற்கான தோற்றுவாய்கள் காணப்படுகின்றன.

**நோக்கம்**
- ❖ குறிப்பிட்ட வரலாற்று முக்கியத்துவமுடைய இடத்தை ஒளிமயப்படுத்துவதற்காக சோலா பெனல்களைக் கொண்ட தூண்களை பொறுத்துதல்
- ❖ சுற்றுலாப் பயணிகளை விழிப்பூட்டுவதற்காக பெயர் பலகைகளை உரிய இடங்களில் பொறுத்துதல்

**விளைவுகள்**
- ➢ போதியளவு ஒளி பரவுவதால் சுற்றுலாப் பயணிகளுக்கு வரலாற்று முக்கியத்துவமுடைய அரன்கலே தியான நிலையத்தில் இரவு நேரத்தில் பயணத்தில் ஈடுபடும் வசதி கிடைத்தல்.
- ➢ பெயர் பலகைகள் பொறுத்தப்படுவதால் இடங்கள், பயண வழி, திசைகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம வாய்ந்த விபரங்களை இலகுவில் அறிந்துகொள்ள முடியும்.

**ஒதுக்கீடு :** ரூபா. 9.84 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.2.46 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது

**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், குருணாகல்

**iv. பண்டுவஸ்நுவரவில் உள்ள தொல்லியல் இடங்களுக்கான பெயர் பலகைகளை சரி செய்தல்**

**அறிமுகம்**

**பண்டுவஸ்நுவரவில் கொரம் கிளித்தலான கோரால, தேவமணி ஹத்பட்டுவ, குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. குருநாகல் மாவட்டத்தின் வரலாற்று புராணங்களின் படி, குருணாகல மாவட்டத்தின் பழமையான நகரமான படுவாஸ்நுவர என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன மற்றும் கட்டிடக்கலைக்குரிய தொல்பொருள் காரணிகள் வெளிப்படையாகவும் வெளிப்படையாகவும் விளக்கப்படக் கூடும். அதன்படி, சுற்றுலாப் பயணிகளுக்கு எளிதாக வரலாற்று இடங்கள் மற்றும் திசையன் பலகைகள் அடையாளம் காணும் பலகைகளை நிறுவவும் முக்கியம்.**

**நோக்கம்:**

- ❖ **பட்டுவாஸ்நுவர பிரதேச செயலக** பிரிவுக்குட்பட்ட **பெயரிடப்பட்ட பலகைகள், விளக்கங்கள், திணைக்கள வழிகாட்டல்களை நிறுவுதல்.**

**விளைவுகள்:**

- ➢ **சுற்றுலா பயணிகள் பொது மற்றும் வரலாற்று தகவல்தொடர்பு தொடர்பு**

**ஒதுக்கீடு :** ரூபா. 2.09 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.0.02 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், குருணாகல்

## 2.1.8 மாத்தளை மாவட்டம்

மாத்தளை மாவட்டத்தில் இரண்டு கருத்திட்டங்கள் முன்னெடுப்பதற்காக ரூபா. 2.46 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் மத்திய மாகாண சபையினால் அமுல்படுத்தப்படுகின்றன.

**i. சுற்றுலா தகவல் மத்திய நிலைய வளங்களை அபிவிருத்தி செய்தல் -மாத்தளை**

**அறிமுகம்**

மத்திய மாகாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளை அபிவிருத்தி செய்வது முதன்மைத் தேவையாக இனம் காணப்பட்டு, சுற்றுலா தகவல் மத்திய நிலைய வளங்களை அபிவிருத்தி செய்தல் அவசியமாகும். சரித்திரப் புகழ்வாய்ந்த மாத்தளை அலுவிகாரையைத் தரிசிப்பதற்கு பெருந்தொகையான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகைதருவதன் காரணமாக மாத்தளை சுற்றுலா தகவல் மத்திய நிலைய வளங்களை அபிவிருத்தி செய்வது மாகாண சுற்றலாத்துறைக்க மிகவும் பயனுடையதாகும்.

**நோக்கம்:**

- ❖ சுற்றுலாப் பயணிகளுக்காக சுற்றுலா தகவல் மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்வதுடன், மாத்தளை மாவட்டத்தை அதிசிறந்த சுற்றுலா வலயமாக உருவாக்குதல்

**விளைவுகள்:**

- ➢ பிரதேசத்தின் வருமானம் அதிகரிக்கும்
- ➢ நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அதிகரிக்கும்

**ஒதுக்கீடு :** ரூபா. 1.16 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 0.25 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நடை பெற்றுக் கொண்டு உள்ளது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

**ii.. சுற்றுலா் மத்திய நிலைய வளங்களை அபிவிருத்தி செய்தல- தம்புள்ள்**

**அறிமுகம்**

சரித்திரப் புகழ்வாய்ந்த தம்புள்ள ரஜமகாவிகாரைக்கு அருகில் சுற்றுலா தகவல் மத்திய நிலைய வளங்களை அபிவிருத்தி செய்தல் மிகவும் அவசியமாகும். வரலாற்றுப் புகழ்வாய்ந்ததும் சுற்றுலா நகரமாகவும் நோக்கப்படும் தம்புள்ள நகரத்தில் சுற்றுலா தகவல் மத்திய நிலையம் அமைப்பதற்கு அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

- ❖ சுற்றுலா பயணிகளுக்கத் தேவையான தகவல்களை அபிவிருத்தி செய்வதுடன் மாத்தளை மாவட்டத்தை அதிசிறந்த சுற்றுலா வலயமாக உருவாக்குதல்.

**விளைவுகள்:**

- ➢ பிரதேசத்தின் வருமானம் அதிகரிக்கும்
- ➢ நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அதிகரிக்கும்

**ஒதுக்கீடு** : ரூபா. 1.30 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.26 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நடை பெற்றுக் கொண்டு உள்ளது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதான செயலாளர், மத்திய மகாணம்

## 2.1.9 மாத்தறை மாவட்டம்

மாத்தறை மாவட்டத்தில் ஒரு கருத்திட்டம் முன்னெடுப்பதற்காக ரூபா. 4.00 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் தென் மாகாண சபையினால் அமுல்படுத்தப்படுகின்றன.

**i. தெனியாய சத்மஹல் எல்லவினைச் சூழவுள்ள அடிப்படைய வசதிகளை அபிவிருத்தி செய்தல். (நுழைவுப் பாதையினை அபிவிருத்தி செய்தல்)**

**அறிமுகம்:**

சத்மஹல் எல்ல, சிங்ஹராஜ பசுமையான வனப்பகுதிக்கு அண்மையில் மாத்தறை மாவட்டத்தின் தெனியான சுற்றுலாத்துறை வலயத்தில் அமைந்துள்ள மிகவும் மனதைக் கவரக்கூடிய நீர்வீழ்ச்சியொன்றாகும். கொட்டபொல பிரதேச சபையின் அறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் 5000 அளவிலான சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்திற்கு வருகை தருகின்றனர். விசேடமாக போயா மற்றும் விடுமுறை நாட்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற போதிலும் அவர்களுக்கான தேவையான வசதிகள் போதியளவில் அபிவிருத்தியடையவில்லை. ஆகையால் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக தற்பொழுதுள்ள வசதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் நுழைவுப் பாதையினை அபிவிருத்தி செய்தல் என்பன அத்தியாவசியமாகவுள்ளது.

**நோக்கம்:**

- ❖ ஒழுங்குமுறையான அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதன் காரணமாக தெனியாய சத்மஹல் எல்ல முக்கியமான சுற்றுலா இடமொன்றாக பிரபல்யப்படுத்தல்.

**விளைவுகள்:**

- ➢ மாத்தறை மாவட்டத்தின் மனதைக் கவரக்கூடிய சுற்றுலா இடங்களை உள்நாட்டு வெளிநாட்டுப் சுற்றுலாப் பயணிகளுக்கிடை பிரபல்யப்படுத்தல்.

**ஒதுக்கீடு** : ரூபா. 4.00 மில்லியன்
**செலவீனம்** : ரூபா.0.80 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், தென் மாகாணம்

### 2.1.10 மொணாராகலை மாவட்டம்

மொணாராகலை மாவட்டத்தில் ஒரு கருத்திட்டம் முன்னெடுப்பதற்காக ரூபா. 1.50 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் மொணாராகலை பிரதேச செயலத்தால் அமுல்படுத்தப்படுகின்றது.

### i. தெமட்டமல் விகாரை அமைந்துள்ள புனித பிரதேசத்தை சுற்றுலாத்துறையை கவரக்கூடிய இடமாக அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்**

மொணராகலை மாவட்டத்தைச் சேர்ந்த புத்தல பிரதேச செயலாளர் பிரிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களைக் கொண்டதாகும். அவற்றுள் தெமட்டமல் விகாரைக்கு முக்கியமான இடம் கிடைத்துள்ளது. விசேடமாக துட்டகைமுனு சந்தாதிஸ்ஸ அரசரின் காலத்தைச் சேர்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல புனைகதைகள் இந்த விகாரையுடன் இணைந்துள்ளன. இந்த இடத்தில் அமைந்துள்ள தூபியுடன் அங்கு உள்ள காண்பதற்கு அரிதான நிர்மாணிப்பாகக் கருதப்படும் காவல் கற் தூண்கள் சுற்றலாப் பயணிகளை மிகவும் கவர்ந்த இடமாகும். ஆகவே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த இந்த விகாரையை மேலும் அபிவிருத்தி செய்வது மிக முக்கியமானதாகும்.

**நோக்கம்**

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- பிரவேச வாயில்களை அபிவிருத்தி செய்தல்
- பெயர் பலகைகள், வீதி அமைப்பு வழிகாட்டல் பலகைகளை பொறுத்துதல்

**விளைவுகள்**

- மொணராகலை மாவட்டத்திலுள்ள சுற்றுலாத்துறையை கவர்ந்த இடங்களை உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றலாப் பயணிகள் இடையே பிரபல்லியப்படுத்தல்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாத்தல்

**ஒதுக்கீடு :** ரூபா. 1.50 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.1.28 மில்லியன்
**பௌ தீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது

**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், மொணராகலை

### 2.1.11 நுவரெலியா மாவட்டம்

நுவரெலியா மாவட்டத்தில் இனங்காணப்பட்ட மூன்று கருத்திட்டத்தற்காக ரூபா. 110.98 மில்லியன் ஆன தொகையொன்று ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டம் பிரதம செயலாளர், மத்திய மாகாண சபையினால் அமுல்படுத்தப்படுகின்றது

### i.சுற்றுலா கவர்ச்சிமிகு இடமொன்றாக கிரகரி ஏரியை அபிவிருத்திசெய்தல் -கட்டம் IV

**அறிமுகம்:**

நுவரெலியா மாவட்டமானது இலங்கையிலுள்ள மிகவும் பிரபல்யம் வாய்ந்த சுற்றுலக் கவர்ச்சியைக் கொண்ட இலக்கு இடங்களில் ஒன்றாகத் திகழ்ந்துவருவதோடு, இந்நகரமானது "சிறிய பிரித்தானியா" எனவும் அழைக்கப்படுகிறது. நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாக் கவர்ச்சிக்குரிய இடங்கள் நிரம்பிக்காணப்படுவதோடு, கிரகரி ஏரியும் அவற்றில் ஒன்றாகும். அமைச்சானது 2016 இக்கருத்திட்டத்தின் கட்டம் IV இற்கான ரூபா. 95.52 மில்லியன் நிதியை ஒதுக்கப்பட்டது.

**நோக்கம்:**

- ❖ வாகனத் தரிப்பிடமொன்றை அபிவிருத்தி செய்தல்.
- ❖ துப்பரவேற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- ❖ குடிநீர் விநியோக முறையொன்றை அபிவிருத்தி செய்தல்.
- ❖ சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுத்து உணவருந்துவதற்கான இளைப்பாறும் இடமொன்றை அபிவிருத்தி செய்தல்.
- ❖ பிரதேசத்தின் எழில்மிகு தோற்றத்தை மேம்படுத்தும் வகையில் அதன் தரைத்தோற்றத்தை அழகுபடுத்தல்.

**விளைவுகள்:**

- ➢ குறித்த பிரதேசத்திலுள்ளள உள்ளூர் மக்களுக்கான தொழில்வாய்ப்பினை உருவாக்குதல்.
- ➢ இலங்கையின் பிரதானமானதொரு சுற்றுலா இலக்கு இடமாக நுவரெலிய நகரின் தரத்தை மேம்படுத்தல்.

**ஒதுக்கீடு :** ரூபா. 63.44 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.15.88 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், மத்திய மாகாணம்

## ii. ஹட்டன் புகையிரத நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் சுற்றுலாத்துறை வசதிகள் நிலையமொன்றை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்**

புகையிரதத்தை போக்குவரத்து ஊடகமாக பயன்படுத்திக்கொண்டு சுற்றுலா வலயங்களுக்கிடையே நடைபெறும் பயணங்கள் சுற்றலாப்பயணிகளுக்கு சிறந்ததொரு வித்தியாசமான அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கின்றது. அதற்கமைய புகையிரதம் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஓய்வு, துப்பரவு ஏற்பாட்டு வசதிகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வசதிகள் ஆகியவை புகையிரத நிலையங்கள் உள்ள பிரதேசங்களில் முக்கியமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். விசேடமாக இயற்கை அழகையும் இதமான காலநிலையையும் கொண்ட மலைநாட்டு புகையிரத வீதி மற்றும் புகையிரத நிலையங்கள் இந்நாட்டு சுற்றுலா பயணிகளின் விசேட கவர்ச்சியை பெற்றுக்கொண்டுள்ளது. மலைநாட்டு புகையிரத பாதையில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் அதேபோல் சிவனொளிபாத காலத்தில் பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்கிவரும் ஹட்டன் புகையிரத நிலையத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- ❖ சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதி வசதிகளை அமைத்தல்
- ❖ சுற்றுலாத்துறைசார்ந்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தல்

**விளைவுகள்**

- ➢ சுற்றுலாப் பயணிகளுக்குப் பொறுத்தமான புகையிரத நிலையமொன்றை அமைத்தல்

**ஒதுக்கீடு :** ரூபா. 3.59 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 0.50 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், மத்திய மாகாணம்

## iii. கொத்மலை மகாவலி மகாசாயவினைச் சூழவுள்ள சுற்றுலாத்துறை சார்ந்த வசதிகளை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்:**

புவியியல் ரீதியாக மற்றும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய சாத்தியக் கூறுகளின் காரணமாகவும் மத்திய மாகாணம் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. புராதன, சமய, தொல்பொருளியல் மற்றும் சுற்றாடல் ரீதியாக அதிகமான சுற்றுலாத்துறையினை ஈர்க்கக் கூடிய பல நிறைய இடங்களைக் கொண்டுள்ள மத்திய மாகாணத்திற்காக அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அண்மைக் காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப்

பயணிகள் உட்பட மக்களிடனிடத்தில் பிரபலமானத, ருவன்வெலி மகாசாயவின் உயரத்திற்கு மட்டும் இரண்டாவதான மகாவலி மகாசாய, மிக முக்கிய இடத்தில் சுற்றுலாத்துறையினைக் கவரக்கூடிய வகையில் இது இருக்கின்றது. இதனை கண்டுகளிப்பதற்காக உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தருவது மிகச் சிறந்த எடுத்துகாட்டாக இருப்பதோடு, இது கொத்மலையின் கேந்திர முக்கியத்துவம் வாயந்த சுற்றுலாத் தளமாகவும் உள்ளது.

**நோக்கம்:**

- ❖ சுற்றுலாப் பயணிகளுக்காக தேவையான அடிப்படை வசதிகளின் விருத்தி
- ❖ சுற்றுலா இடங்களை அபிவிருத்தி செய்தல்.

**விளைவுகள்:**

- ➢ உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக தேவையான சுகாதார மற்றும் ஓய்வு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

**ஓதுக்கீடு :** ரூபா. 43.95 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 8.79 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், மத்திய மாகாணம்

### 2.1.12 பொலநறுவை மாவட்டம்

பொலநறுவை மாவட்டத்தில் ஒரு கருத்திட்டத்திறகாக ரூபா. 15.99 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

#### i. மதிரிகிரிய வ்டடதாகய குளம் அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்:**
மதிரிகிரிய வட்டதாகே பொலநறுவை இத்தீவுக்கு மட்டுமே உரிய மரபுரிமையுடைய இடம் ஒன்றல்ல. மாறாக முழு உலகத்திற்கும் பிரசித்தி பெற்ற தொல்லியல் மற்றும் புனிதத் தன்மையுள்ள இடமாகும் அதனால் பாழடைந்து கிடக்கும் இக் குளத்தை கவர்ச்சிகரமான குளமாக மாற்றி குளத்தைச் சுற்றி நடைபாதையையும் அமைத்து உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கு ஏற்ற கவர்ச்சிகரமான சூழலை ஏற்படுத்துவதே நோக்கமாகும். இத்திட்டத்துக்கு 2016 ரூபா 20.00 மில்லியன ஒதுக்கப்பட்டது.

**குறிக்கோள்:**
- ❖ வட்டதாகேயை ஒரு சுற்றுலா பயணிகளைக் கவரும் தளமாக உருவாக்குதல்.
- ❖ மதிரிகிரிய மக்களுக்கும் அம் மாகாண மக்களுக்கும் வருமான வழிகளை உருவாக்குதல்.

**விளைவு:**
- ➢ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எழில்மிக்கதும் நட்பு நேயம் கொண்டதுமானதொரு சூழலில் தாபிக்கப்பட்டது.

**2017 இல் ஓதுக்கீடு:** ரூபா. 15.99 மில்லியன்
**செலவீனம் :** கையிறுப்பில் உள்ள பற்றுச்சீட்டு
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், வடமத்திய மாகாணம்

### 2.1.13 புத்தளம் மாவட்டம்

புத்தளம் மாவட்டத்தில் பதினைந்து கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூபா. 48.58 மில்லியன் ஆன தொகையொன்று ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் புத்தளம் பிரதேச செயலத்தால் அமுல்படுத்தப்படுகின்றது.

#### i. தலவில்லவில் புனித அன்னாள் ஆலயத்தில் துப்பரவேற்பாட்டு வசதிகள், வாகனத் தரிப்பிட வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதோடு, உயிர் காப்புக் கடமையில் ஈடுபடுபவர்களுக்கான கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல்

**அறிமுகம்:**
மேற்படி தலவில ஆலயமானது புனித அன்னாளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டதாகுமென்பதோடு, இது நாட்டிலுள்ள, அதிகளவான பார்வையாளர்கள் விஜயம் செய்கின்ற ஆலயங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது. மேலும் இது மக்கள் தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்து வருகின்ற

ஆலயமாகவும் திகழ்கிறது. அமைச்சானது 2016இல் மூன்று கருத்திட்டத்திற்கு ரூபா. 4.42 மில்லியன் நிதியை ஒதுக்கப்பட்டது. புனித அன்னாள் ஆலயத்தொகுதி மற்றும் அதனையண்டிய கடற்கரைப் பிரதேசம் ஆகியவற்றில் மூன்று கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**குறிக்கோள்கள்:**

- ❖ பார்வையாளர்களுக்கான வாகனத் தரிப்பிட வசதிகளை மேம்படுத்தல்.
- ❖ துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்
- ❖ அருகிலுள்ள தலவில்ல கடற்கரைப் பிரதேசத்தில் உயிர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்ற கடற்படையினர் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோருக்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.

**விளைவுகள்:**

- ➢ உள்ளக வீதி நெரிசல்கள், வாகன விபத்துக்கள் மற்றும் வாகனங்களைத் தற்காலிகமாக வீதிகளில் தரித்து வைப்பதன் மூலம் பாதசாரிகளுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் போன்றவற்றைக் குறைக்கச்செய்தல்.
- ➢ சுகாதார நிலைமையினையும் தூய்மையான சுற்றாடலையும் பேணச் செய்தல்.
- ➢ ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த நிபந்தனைகள மேம்படுத்தல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 3.15 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 3.15 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

### ii. கம்மால பாலம் முதல் கடற்கரை வரையுமான வீதி மற்றும் அங்கம்பிட்டிய சந்தி முதல் அளுத்தொட்ட சந்தி வரையான வீதி ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்:**

புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வய்க்கல மற்றும் வெல்லமங்கரய ஆகிய பிரதேசங்கள் கலைப்படைப்பும் எழில்மிகு தோற்றத்தையும் உடைய கடற்கரையினைக் கொண்டுள்ளன. இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமாக மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைக் கைத்தொழில் போன்றன காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் எழில்மிகு தோற்றம் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துவருவதோடு, இப்பிரதேசத்தில் சிறந்த ஹோட்டல்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், தெரிவுசெய்யப்பட்ட அணுகல் பாதைகளை புத்தாகம் செய்வதற்கான நடவடிக்கைகளை அமைச்சு எடுத்தது. 2016 இக்கருத்திட்டத்திற்காக ரூபா. 41.48 மில்லியன் நிதியை ஒதுக்கப்பட்டது.

**குறிக்கோள்கள்:**

- ❖ மேற்படி எழில் கொஞ்சும் சுற்றுலாப் பிரதேசத்திற்கு இலகுவான அணுகல் பாதையினை வழங்குவதன் மூலம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல்.
- ❖ பிரதேசத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலாத்துறை சார்ந்த அம்சங்களைத் தாபிப்பதற்கான வசதிகளை வழங்கல்.

**விளைவுகள்:**

- ➢ வைக்கல கடற்கரையானது மேற்குக் கரையோரப் பிரதேசதின் எழில்மிகு கடற்கரையாக வய்க்கல கடற்கரையை அபிவிருத்தி செய்வதோடு, அதன் மூலம் சுற்றுலாச் சேவை வழங்குனர்களின் சேவைகளை இப்பிரதேசத்திற்கும் விரிவாக்கம் செய்து முதலீடு செய்வதற்காக ஊக்குவித்தல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 7.06 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.7.06 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

### iii. கப்பலடி பிரதேசத்தில் டிரான்ஸ்போமர்(மின்பிறப்பாக்கி) ஒன்றை பொறுத்துதல்

**அறிமுகம்:**

விசேட சுற்றாடலையும் பல கடல் வளங்களையும் உடைய கவர்ச்சியான கடற்கரையைக் கொண்ட கற்பிட்டி பிரதேசம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த சுற்றுலா வலயமாகும். கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த முதலப்பாலி கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கப்பலடி கிராமத்தின் கடற்கரை பிரதேசம் சுற்றுலாத்துறை கைத்தொழிலுக்கு உகந்த பிரதேசமாக காணப்படுவதால் அங்கு சுற்றுலா ஹோட்டல்கள், உணவகங்கள், தொலைதொடர்பு சேவைகளை வழங்கிவரும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த சேவைகளை வழங்கிவரும்

நிறுவனங்கள் ஆகிவை பெரும் எண்ணிக்கையில் இயங்கிவருவதுடன் எதிர்காலத்தில் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில்முயற்சியாளர்கள் உருவாவதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. இப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள டிரான்ஸ்போமரினால் கப்பலடி, பாலங்குடா ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுவதால் போதியளவு மின்கொள்திறனை வழங்க முடியாதுள்ளது. தொடர்ந்து ஏற்படும் மின்சார தடங்கல்கள், சுற்றுலாத்துறை கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்கள், மரபார்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் அண்ணளவாக 300 குடும்பங்களைச் சேர்ந்த கிராமவாசிகளின் அன்றாட அலுவல்களுக்கு தடையாக அமைந்துள்ளது. ஆகவே இப் பிரதேசத்திற்கு போதியளவு மின்வலு கொள்திறனுடைய மின் தொடர்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நோக்கம்:**
- ❖ போதியளவு கொள்திறனுடைய மின்பரிமாற்றியொன்றை பொருத்துவதால் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தல்

**விளைவுகள்:**
- ➢ சுற்றுலாத்துறையில் ஈடுபட்டிருக்கும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவித்தல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 4.97 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.4.97 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

## iv. கப்பலடி உள்ளக வீதி அபிவிருத்தி- கட்டம் I,II மற்றும் III

**அறிமுகம்:**
புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் தலவில - கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கப்பலடி கிராமம் மீன்பிடிக் கைத்தொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை வர்த்தகம் ஆகியவற்றைக் கொண்டு அபிவிருத்தி அடைந்துவரும் பிரதேசம் ஆகும். இப் பிரதேசத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள், கயிட்ஸ் சர்பின் விளையாடுவதற்காக வரும் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு விளையாட்டு நிலைகள், விடுதிகள், உணவு போக்குவரத்து, தொலைதொடர்புகள் போன்ற வசதிகளை வழங்கி வருகின்றார்கள். கற்பிட்டியை சுற்றுலாத்துறைசார்ந்த வலயமாக அபிவிருத்தி செய்வதுடன் 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறைக்கான வசதிகளை வழங்குவதற்காக இப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**நோக்கம்:**
- ❖ கப்பலடி கிராமத்தின் உள்ளக வீதித் தொகுதியை அபிவிருத்தி செய்தல்.

**விளைவுகள்:**
- ➢ கயிட்ஸ் சர்பின் விளையாட்டு தொடர்பில் சுற்றுலாப் பயண முடிவாக கப்பலடி பிரதேசத்தை பிரபல்லியப்படுத்தல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 6.34 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 6.34 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

## iv. இரனவில கடற்கரை பூங்காவை அபிவிருத்தி செய்வதிற்கான வரைபடத்தினை தாயாரித்தல்

**அறிமுகம்:**

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த இரனவில, மனதைக்கவரக்கூடிய கடற்கரையைக் கொண்ட பிரதேசமாகும். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக நடமாடிவரும் இரனவில கடற்கரை பூங்கா பிரதேசத்தை முறையான கட்டிட நிர்மாணிப்புத் திட்டத்துக்கு அமைய அபிவிருத்தி செய்வதால் புத்தளம் மாவட்டத்து சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்கு அது உருதுணையாக அமையும். உத்தேச கடற்கரை பூங்காவிற்கு அருகில் கழிமுகம் அமைந்திருத்தல், கட்டுநேரிய தொடக்கம் சிலாபம் வரை கடற்கரை பூங்காவொன்று அபிவிருத்தி செய்யப்படாமை ஆகியவை இரனவில கடற்கரை பூங்காவின்பால் சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சியை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன. ஆகவே புத்தளம் பிரதேசத்து கடற்கரையை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடைந்துவரும் காலகட்டத்தில் இரனவில

கடற்கரை பூங்காவை முறையான திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய உசாத்துணை பணியகத்தினால் தயாரிக்கப்படும் கடற்கரை அபிவிருத்தி திட்டத்துக்கு அமைய இத் திட்டம் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

**நோக்கம்:**

- உத்தேச இரனவில பூங்கா தொடர்பில் கட்டிட நிர்மாணிப்புத் திட்டமொன்றை தயாரித்தல்.

**விளைவுகள்:**

- முறையான திட்டத்தின் கீழ் இரனவில கடற்கரை பூங்கா அபிவிருத்தி கருத்திட்டத்தை 2018 இல் ஆரம்பித்தல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 0.30 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.0.30 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

### vi.மானவேரி ஈஸ்வர கோயில் பிரதேசத்தில் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை அமைத்தல்

**அறிமுகம்**

புத்தளம் மாவட்டத்து ஆரச்சிகட்டுவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ராஜகதலுவ கிராம உத்தியோகத்தர் வசத்தில் கொழும்பு-புத்தளம் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள இந்து சிவன் கோயில் இராவணன் அரசனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது. யாழ்ப்பாண பரராஜசேகரன் அரசனின் காலத்தில் எழுதப்பட்ட கைலாச புராணத்திலும் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. விசேட மத யாத்திரைகளில் ஈடுபடும் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பக்தர்கள் அடிக்கடி இப் பிரதேசத்துக்கு வருகை தருகின்றார்கள். கோயிலின் வருடாந்த மத விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்றுவருவதுடன் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அதில் கலந்துகொள்கிறார்கள்.
ஆகவே அவ்விடத்தின் துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் முக்கியமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுக்கான துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- சுத்தமான மற்றும் பசுமையான சுற்றாடலை அமைத்தல்

**விளைவுகள்**

- சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த இடமாக அபிவிருத்தி செய்வதன் ஊடாக அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் காலத்தை நீடித்தல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 4.63 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.1.95 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

**vii.கந்தகுளிகுடா டச்பே பிரதான வீதிக்கு கொன்கிரீட் இடுதல்.**

**அறிமுகம்**

புத்தளம் மாவட்ட கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கந்தகுளி குடா கிராம உத்தியோகத்தர் வசம் 1.5 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டது. மரபார்ந்த மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறை சேவைகளை வழங்கல் ஆகியவை அப்பிரதேச மக்களின் முக்கியமான வாழ்க்கைத் தொழில்கள் ஆகும். இப் பிரதேசம் சர்பின் விளையாட்டுக்கு மிகப் பொறுத்தமான பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. கயிட்ஸ் சர்பின் விளையாட்டை கற்பதற்காக கற்பிட்டி பிரதேசத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் அவ் விளையாட்டில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பார்க்கும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இப் பிரதேசம் பிரசித்திபெற்று விளங்குகின்றது. ஆகவே கந்தகுளிகுடா பிரதேசத்திற்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல் மற்றும் அக்கிராமத்தில் வாழ்ந்துவரும் மீனவர்கள் அதிகமாக பயன்படுத்திவரும் இவ் வீதிக்கு கொன்கிரீட் இடுவது சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உருதுணையாக அமையுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**நோக்கம்**

- ❖ கந்தகுளிகுடா பிரதேசத்திலுள்ள பிரவேச பாதையின் அபிவிருத்தி

**விளைவுகள்**

- ➢ கயிட்ஸ் சர்பின் விளையாட்டு/பயிற்சிகளுக்காக வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இக் கிராமத்தின்பால் கவருதல்.

**2017 இல் ஓதுக்கீடு:** ரூபா. 2.29 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.1.96 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

**viii. கந்தகுழி குடா ஓஸியானா ஹோட்டலுக்கு அருகிலிருந்து கடற்கரை வரையுள்ள வீதிக்கு கொன்கிரிட் இடல்**

**அறிமுகம்:**

கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில கந்தகுழி குடா கிராம உத்தியோகத்தர் வசத்தில் அமைந்துள்ள இப்பிரதேசததுக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல் அதேபோல் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் அதிகமாக பாவித்துவரும் இவ் வீதிக்கு கொன்கிரீட் இடுவதால் சுற்றுலாத்துறைக்கு உருதுணையாக அமையுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**நோக்கம்:**

- ❖ கந்தகுலி குடா பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக்கொள்ளல்.
- ❖ கந்தகுலி குடா கிராமத்து மீனவர்கள் மீன்பிடி துறைமுகத்துக்குச் செல்வதற்காக பாவித்துவரும் வீதியை அபிவிருத்தி செய்தல்
- ❖ கயிட்ஸ் சர்பின் விளையாட்டுக்காக வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கல்

**விளைவுகள்:**

- ➢ சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதால் அதிகமாக வெளிநாட்டு செலாவணி ஈட்டப்படல்
- ➢ அப்பிரதேசத்து மக்களின் வாழ்க்கை நிலை உயர்வடைதல்.

**2017 இல் ஓதுக்கீடு:** ரூபா. 1.75 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.1.48 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

## ix. இலந்தடி ஆலங்குடா வீதிக்கு கொன்கிரீட் இடல் – i மற்றும் ii ஆம் கட்டம்

**அறிமுகம்**

கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த இலந்தடி பிரதேசமும் அப்பிரதேசத்தைச் சார்ந்த சுத்தமான கடற்கரை பிரதேசமும் கயிட்ஸ் சர்பின் விளையாட்டில் ஈடுபடல் மற்றும் டொல்பின் மீன்களை பார்வையிடக்கூடிய பிரதேசமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கிடையே பிரசித்தி பெற்று விளங்குகின்றது. அங்கு தற்போது சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்கிவரும் நிலையங்கள் இருப்பதுடன் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஏதுவான தனியார் முதலீடுகள் அதிகமாகவுள்ள பிரதேசமாக அப்பிரதேசத்தை அடையாளப்படுத்த முடியும். ஆகவே இப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை முறையாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் கனம் செலுத்தப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- ❖ மீன்பிடித் துறைமுகம்,கயிட்ஸ் சர்பின் விளையாட்டு மற்றும் டொல்பின் மீன்களை பார்வையிடுவதற்காக பயன்படுத்தப்படும் உள்ளக பிரவேச பாதைகளை அபிவிருத்தி செய்தல்

**விளைவுகள்**

- ➢ இலந்தடி பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழில் விருத்தி அடைதல்.
- ➢ வருமான வழிகள் அதிகரிப்பதன் ஊடாக அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 4.54 மில்லியன்
**செலவீனம் :** ரூபா. 3.86 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** செயலாளர், புத்தளம் மாவட்டம்

## x. புதுகுடியிருப்பு பிரதேசத்தில் டிரான்ஸ்போமர்( மின்பிறப்பாக்கி ) ஒன்றை பொறுத்துதல்

**அறிமுகம்:**

கற்பிட்டி சுற்றுலா வலயமாக பிரபல்லியமடைந்த அதேநேரம் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த புதுகுடியிருப்பு பிரதேசத்தில் சுற்றுலாத்துறை கைத்தொழில்சார்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன.ஆனால் அதிகரித்துவரும் மின்வலு தேவையை ஈடுசெய்யக்கூடிய கொள்திறனுடைய தேசிய மின்வழங்கல் தொகுதியொன்று இல்லாததால் தொடர்ந்து ஏற்படும் மின்சார தடங்கல்கள், சுற்றுலாத்துறை கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மரபார்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் கிராமவாசிகளின் அன்றாட அலுவல்களுக்கு தடையாக அமைந்துள்ளது. ஆகவே பிராந்திய ரீதியில் சுற்றுலா பயண முடிவுகளை அபிவிருத்தி செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை மின்சார சபையின் உதவியுடன் இப் பிரதேசத்தின் மின்வலு அழுத்தத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

- ❖ புதுகுடியிருப்பு பிரதேசத்தில் அதி கொள்திறனுடைய மின்பறிமாற்றியொன்றை பொறுத்துதல்

**விளைவுகள்:**

- ➢ சுற்றுலாத்துறையில் ஈடுபட்டிருக்கும் தொழில்முயற்சியாளர்கள், உள்நாட்டு மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்காக தொடர்ந்து மின்வசதிகளை வழங்கல்

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 2.32 மில்லியன்
**செலவீனம் :** ரூபா.2.32 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம் :** நிறைவு பெற்றது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், புத்தளம் மற்றும் இலங்கை மின்சார சபை

**xi. ஆராச்சிக் கட்டுவ மானவேரிய ஓய்விடம் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைச் சுற்றி வேலி அமைத்தல்.**

**அறிமுகம்:**

ஆராச்சிக்கட்டுவ பத்துலுஓயா மற்றும் ததுரு ஓயா ஆகிய பிரதேசங்கள் இயற்கை வளங்கள் நிறைந்த 43 கிராம சேவை பிரிவுகளைக் கொண்ட பிரதேசமாகும். தற்பொழுது ஆனைவிழுந்தாவ பகுதி, வெஹெர குளக் காட்டுப் பகுதி வெஹெர குளக் காட்டு ர[மகா விகாரை உடப்பு கோவில் மற்றும் முத்துப்பந்திய மீனவ கிராமம் போன்ற பிரதேசங்களுக்கு அனேக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இப் பகுதிகளுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்காக, ஆராச்சிக் கட்டுவ மானவேரிய ஓய்விடம் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைச் சுற்றி வேலி அமைப்பதற்கு அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நோக்கம்:**
உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக முழு வசதிகளுடன் கூடிய ஓய்வு மையம் ஒன்றினை அமைத்தல்.

**விளைவுகள்**
உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக பாதுகாப்பான அழகிய சூழலையுடைய பகுதி உருவாக்குதல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 7.57 மில்லியன்
**செலவீனம்** : கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை
**பௌதீக முன்னேற்றம்** : நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது
**அமுல்படுத்தும் முகவர்:** மாவட்ட செயலாளர், புத்தளம் மற்றும் இலங்கை மின்சார சபை

**2.1.14 இரத்தினபுரி மாவட்டம்**

இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று கருத்திட்டங்களுக்காக ரூபா. 5.60 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

**I. பததொட்ட, தெவகுஹவ பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்.**
**ii. ஹந்தகிரிய தேசிய பூங்காவில் பாதை மேற்பரப்பினை மேம்படுத்தல் (15 Km)**
**iii. சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி உட்கட்டமைப்பு**

**அறிமுகம் :**
உடவளவ தேசிய பூங்காவானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்து வருகின்றது. இங்குள்ள ''சமநல கலாபய'' (பட்டம்பூச்சிகளின் வலயம்) அண்மைக்காலமாக மிகவும் பிரபல்யமடைந்து வருகிறது. இருப்பினும், மேற்படி வலயத்திற்கான சதகிரிய நுழைவுப் பாதை மிகவும் முக்கியமானதாகும்.

**குறிக்கோள்:**
- ஹதகிரிய முதல் "சமநல கலாபய" வரையான அணுகல் பாதையை மேம்படுத்தல்.

**விளைவு:**

- உடவளவ தேசிய பூங்காவை மைய அவதானமாகக் கொண்டு உடவளவ பிரதேசத்தை ஒரு சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்தல்.
- பிரதேசத்திலுள்ள சமூகத்தினருக்கு சுற்றுலாத்துறை சார்ந்த நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 4.04 மில்லியன்
**செலவீனம்** : ரூபா. 0.40 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், சப்ரகமுவ மாகாணம்

**iv.போபத் நீர்வீழ்ச்சியினைச் சூழவுள்ள சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான கூட்டிணைக்கப்பட்ட திட்டமொன்றை வகுத்தல்**

**அறிமுகம்:**
இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான களு கங்கையின் பிரதான கிளையாறான குருகங்கையினைன் சுற்றி இந்த அழகான நீர்வீழ்ச்சி அமையப் பெற்றுள்ளது. அரசமர இலை வடிவத்தைப் போன்று பெருக்கெடுத்து வருகின்ற போபத் நீர்வீழ்ச்சி உள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திருப்பது அதன் அழகுத் தன்மை மட்டுமன்றி, நீர்வீழ்ச்சியின் உள்ளே இயற்கையாகவே நீர்த்தடாகமொன்று அமைந்திருப்பதென்பதனாலாகும். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணற்ற ஈர்ப்புக்கு பாத்திரமாகவுள்ள நீர்வீழ்ச்சியின் அழகினைப் பாதுகாத்து அவர்களுக்கான முறையான சேவையொன்றை வழங்குவதற்காக இந்த இடத்தினை ஒழுங்காக திட்டமிட்டு விருத்தி செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆகையால் போபத் நீர்வீழ்ச்சியினைச் சூழவுள்ள சுற்றுலாத்துறை வசதிகளை விருத்தி செய்வதற்காக ஆலோசனை மற்றும் சுற்றுலாத்துறை திட்டமிடல் சேவையினை தொழில் தேர்ச்சியுள்ள ஈடுபடுத்தி நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**நோக்கம்:**
- சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் போபத் நீர்வீழ்ச்சியினை சூழவுள்ள சுற்றுலாத்துறை வசதிகளை விருத்தி செய்வதற்காக கூட்டுத் திட்டமொன்றை வகுப்பதற்காக சுற்றுலாத்துறை ஆலோசனை மற்றும் திட்டமிடல் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்.

**விளைவு:**

- போபத் நீர்வீழ்ச்சி அபிவிருத்திக்காக ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கல்.

**2017 இல் ஒதுக்கீடு:** ரூபா. 1.80 மில்லியன்
**செலவீனம்** : ரூபா.0.36 மில்லியன்
**பௌதீக முன்னேற்றம்** : நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது
**அமுல்படுத்தும் முகவர்:** பிரதம செயலாளர், சப்ரகமுவ மாகாணம்

## 2.2. சுற்றுலாத்துறை மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்

சுற்றுலாத்துறையில் திறன்களைக் கொண்டவர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருகின்றது. ஆகவே அரசு தனியார்த்துறையின் பங்களிப்புடன் விருந்தோம்பல் சேவை கைத்தொழிலில் சேர்வதற்கு விரும்பும் தொழில் இல்லாத இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டுத் திட்டத்தின் ஊடாக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.2.1 மூன்று மாத விருந்தோம்பல் சேவைகள் பயிற்சித் திட்டம்

2017 ஆம் ஆண்டில் விருந்தோம்பல் சேவை களத்தில் தொழில்வாய்ப்புகள் இல்லாத இளைஞர் யுவதிகள் 1,200 பேரை பயிற்றுவிப்பதற்காக 20 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படடது. இவ் விருந்தோம்பல் சேவை பயிற்சித் திட்டங்கள் மாகாண சபை, தனியார் ஹோட்டல் பாடசாலைகள் மற்றும் தனியார் ஹோட்டல்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்டுள்ளன. இப் பயிற்சித் திட்டம் விருந்தினரை வரவேற்றல் முகாமைத்துவம், உணவகம் மற்றும் சேவை முகாமைத்துவம், வீட்டு முகாமைத்துவம் பற்றிய அளவுகோல்களைக் கொண்ட மற்றும் செயற்பாட்டு பயிற்சிகளைக் கொண்டதுமாகும். இதன் ஊடாக சர்வதேச மட்டத்திலான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பேச்சு, வாழ்க்கைத் திறன்கள், தொலைதொடர்புகள் மற்றும் நுகர்வோர் சேவைகள் பற்றிய பரந்த அறிவு பெற்றுக்கொடுக்கப்படும்

சுற்றுலாத்துறை ஹோட்டல்கள் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) ஆகியவற்றின் ஊடாக பாடநெறிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அந்நிறுவனத்தின் ஊடாக மதிப்பீடுகள் மற்றும் பரீட்சை அலுவல்கள் நடாத்தப்பட்டன.

மாணவர்களுக்கு அவர்களின் தொழில் மேம்பாட்டுக்காக அமைச்சினால் வழங்க்ப்பட்ட சான்றிதழ்களின் ஊடாக அப்பாடநெறிக்கு மேலதிக பெறுமதி சேர்வதுடன் கைத்தொழில்

மேம்பாடும் ஏற்படுகின்றது. அதன் ஊடாக விருந்தோம்பல் சேவைகள் துறையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

**நோக்கம்:-**

1. தொழில்கள் இல்லாத இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கல்
2. விருந்தோம்பல் பயிற்சிகள் தொடர்பில் பெண்களின் பங்களிப்பினை அதிகரித்து அவர்களின் வருமானத்தை அதிகரித்தல்
3. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வறுமை நிலையை குறைத்தல்
4. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

**ஆக்கம்-**

- உணவக மற்றும் சேவைகள் முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறிகளை பயின்றுள்ள இளைஞர் யுவதிகள் -839 பேர்
- வீட்டு நிருவாக முகாமைத்துவம் பயிற்சிப் பாடநெறிகளை பயின்ற இளைஞர் யுவதிகள் -219 பேர்
- விருந்தினரை வரவேற்கும் முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறிகளை பயின்ற இளைஞர் யுவதிகள்-142 பேர்

விருந்தோம்பல் பயிற்சித் திட்டத்தின் சாராம்சம் -2017 அட்டவணை 2.2

| | பயிற்சி நிறுவனம் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | | | | மொத்த ஒதுக்கீடு(ரூபா.மில்) |
|---|---|---|---|---|---|---|
| | | உணவக சேவை | வீட்டு நிருவாகம் | விருந்தினரை வரவேற்றல் | மொத்தம் | |
| 1 | சப்ரகமுவா மாகாணம் | 23 | | 19 | 42 | 0.63 |
| 2 | தென் மாகாணம் | 110 | 86 | 40 | 236 | 3.54 |
| 3 | வட மத்திய மாகாணம் | 83 | 20 | | 103 | 1.55 |
| 4 | கிழக்கு மாகாணம் | 80 | | | 80 | 1.20 |
| 5 | வட மாகாணம் | 20 | | 24 | 44 | 0.66 |
| 6 | மத்திய மாகாணம் | 219 | 38 | | 257 | 3.85 |
| 7 | மேல் மாகாணம் | 285 | 14 | 49 | 222 | 4.30 |
| 8 | வடமேல் மாகாணம் | 110 | | | 110 | 1.65 |
| | நிர்வாக செலவினம் | | | | | 1.50 |
| | **மொத்தம்** | **867** | **158** | **132** | **1157** | **18.92** |

*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

### 2.2.2 சுற்றுலா சேவைகளை வழங்குபவர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான நிழ்ச்சித் திட்டம்

அமைச்சினால் சுற்றுலா மனிதவள மேம்படுத்தலின் கீழ் நாடலாவிய ரீதியில் இருக்கும் சுற்றுலாத்துறை சார்ந்த தரப்பினரின் திறன்களை மேம்படுத்துவதற்காக மூன்று நாள் நிகழ்ச்சித் திட்டமொன்று வெற்றிகரமாக நடாத்தபபட்டுள்ளது.

சிறப்பு நிபுணத்துவம் பெற்ற போதனாசிரியர்களால் மாகாண சுற்றுலா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சுற்றுலாத்துறை சேவைகளை வழங்குபவர்கள் தொடர்பில் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது. சேவை வழங்குநர்கள் 1300 பேருக்கு பயிற்சியளிப்பதே அதன் நோக்கமாகும்.

சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்களின் நடத்தைகள் மற்றும் சேவையின் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதற்காகவே இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

**இலக்குடைய குழு :**
போக்குவரத்தை வசதியாக்கும் (முச்சக்கர வண்டிச் சாரதிகள், வாடகை வண்டிச் சாரதிகள், தனியார் போக்குவரத்து சேவைகளை வழங்குபவர்கள்) சுற்றுலா வர்த்தக நிலையங்களை செயற்படுத்துபவர்கள், முகாமையாளர்கள், விற்பனை நிலைய உரிமையாளர்கள், சிறிய மற்றும் மத்தியளவிலான விடுதிகளை செயற்படுத்துபவர்கள் (வாடிவீடுகளை பராமரிப்பவர்கள், விருந்தோம்பல் இல்லங்களின் உரிமையாளர்கள், இளைய விடுதி உரிமையாளர்கள்) வீதிகள் இடங்கள் மற்றும் நகரங்களில் நடமாடும் வர்த்தகங்களில் ஈடுபட்டிருப்போர்.

**நோக்கங்கள்**

1. சுற்றுலாக் கைத்தொழிலின் ஊடாக மக்கள் வலுவூட்டப்படுவதை மேம்படுத்துவதற்காக அடி மட்டத்திலான சுற்றுலாக்கைத்தொழில்களில் ஈடுபட்டுவரும் தரப்பினர்களுக்கிடையே உண்மையான வேறுபாடுகளை முன்வைத்தல்
2. சுற்றுலாக் கைத்தொழில் தற்போதுள்ள மற்றும் அது பரவிவரும் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுககான புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கல்
3. நாட்டின் நிலையான அபிவிருத்தி தொடர்பில் அடி மட்டத்திலான சுற்றுலாக் கைத்தொழிலின் தரப்பினரிடமிருந்து தரமான சேவையைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்
4. சுற்றுலாப் பயணிகளின் திருப்தியை அதிகரிப்பதற்காக சுற்றுலாவின் இயல்பினையும் தரத்தையும் மேம்படுத்தல்.

சுற்றுலாச் சேவை வழங்குநர்களுக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்சித் திடடம் -2017

அட்டவணை 2.3

| இல | மாகாணம் | கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு(ரூபா.மில்) |
|---|---|---|---|
| 1 | மேல் | 150 | 0.37 |
| 2 | தென் | 200 | 0.241 |
| 3 | வட | 120 | 0.216 |
| 4 | சப்ரகமுவா | 150 | 0.41 |
| 5 | வட மத்திய | 145 | 0.292 |
| 6 | மத்திய | 173 | 0.433 |
| 7 | வட மேல் | 130 | 0.347 |
| 8 | ஊவா | 120 | 0.357 |
| | **மொத்தம்** | **1,093** | **2.67** |

*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

**விருந்தோம்பல் பயிற்சித் திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் விழா**

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டம் சுற்றுலா ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவனம், மாகாண சபை, தனியார்த்துறையின் விருந்தோம்பல் பயிற்சி நிறுவனம் மற்றும் முதல் தர ஹோட்டல்களின் பங்களிப்புடன் 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களின் தலைமையில் பயிற்சி பெற்றவர்கள் 605 பேருக்கு 2017 மார்ச் மாதம் 02 ஆம் திகதி இலங்கை மன்ற நிறுவனத்தில் நடைபெற்ற விழாவின்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 2.3 சமூக சுற்றுலாத்துறை கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

**அறிமுகம்**

இத்திட்டத்தின் நோக்கம் ஆனது இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துவருவதன் ஊடாக சுற்றுலாத்துறையின் வாழ்க்கைத் தொழிற் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வழிகளும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடவசதிகள், போக்குவரத்து மற்றும் பொருட்கள் விற்பனை என வகைப்படுத்தலாம்.

**நோக்கங்கள்**

i. சுற்றுலாத்துறை தொடர்பிலான தொழில் வாய்ப்புகளை கிராமங்களில் ஏற்படுத்துவதன் மூலம் கிராம மக்களின வாழ்க்கை தரம் மேம்படுதவதோடு பொருளாதார நன்மைகளும் பகிரப்படும்

ii. நகரப்புற விடுதி கேள்வி, நிரம்பலுக்கு மாற்றீட்டு விடுதி வசதிகளை வழங்குதல்

iii. கலை , கைவினை,இயற்கை, சுற்றுச்சுழல் மற்றும் விவசாயம் போன்ற இலங்கை கலாசாரத்தில் அடையாளம் காணப்பட்ட கிராமங்களை சந்தைப்படுத்தல்

இந்த அமைச்சினால் முன்வைக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணைக்கு அமைய, 2017 ஆம் அண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக சமூக சுற்றுலாக் கிராமங்கள் அபிவிருத்தி தொடர்பில் 25 மி.ரூபா ஒதுக்கப்பட்டு நான்கு சமூக சுற்றுலாக் கிராமங்கள் 0.96 மி.ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டது..

**செயற்பாடுகள்**

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கான அடிப்படை நடவடிக்கையாக , மாகாண மட்டத்தில், பிரதேச மற்றும் அமைச்சுகளின் மட்டத்தில் கருத்திட்டங்களை செயற்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு எம்பிலிபிட்டிய தேசிய தலைமைத்துவ பயிற்சி நிலையத்தில் வதிவிட பயிற்சிப் பட்டறையொன்று ஒழுங்கமைக்கப்பட்டது. அது தொடர்பில் ரூபா 332,961.09 ஆகுசெலவு ஏற்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்திள் வருமாறு

01. கிலோயா சமூக சுற்றுலாக் கிராமம்
02. யாப்பகுகம சமூக சுற்றுலாக் கிராமம்
03. கொடேகேன சமூக சுற்றுலாக் கிராமம்
04. மெதேரப்பிட்டியா சமூக சுற்றுலாக் கிராமம்
05. மகிரியபுர சமூக சுற்றுலாக் கிராமம்

**வரவு- செலவு ஒதுக்கீடு**: 25.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

**2017 ஆண்டு வரையான செலவினம்** : 0.556 மில்லியன் ரூபா

## 2.3. சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பினை மேம்படுத்தும் முகமாக (Hot Spot) நடமாடும் பொலிஸ் பிரிவொன்றை விஸ்தரித்தல்

தரமான சுற்றுலா சேவையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக பாதுகாப்பும் பராமரிப்பும் மிகவும் முக்கியமானது. சுற்றுலா பயண முடிவுகளில் நிலவிவரும் வெற்றியோ தோல்வியோ சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான சுற்றாடலை பெற்றுக்கொடுப்பதன் இயலுமை மீது தங்கியிருப்பதுடன் அது பொருளாதாரம் சார்ந்த விடையங்களையும் விஞ்சிய விடயமாகத் தெரிகின்றது. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் சட்டபூர்வமான எதிர்ப்பார்ப்பு இருந்துவருவதாக அரசினால் உறுதிப்படுத்தப்படல் மற்றும் சுற்றுலாத்துறை கைத்தொழிலின் ஊடாக சுய முயற்சியில் அப் பராமரிப்பினை பாதுகாப்பதற்கான உரித்து இருப்பதற்கான எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே, சுற்றுலாக் கைத்தொழில் பரவலாக நடைபெற்றுவரும் (hot spot) பிரதேசங்களில் பணிபுரிந்துவரும் நடமாடும் பொலிஸ் சேவையை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் இவ் அமைச்சின் கீழ் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

1. சுற்றுலாப் பயணியின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை உறுதிப்படுத்தல்
2. இலங்கையில் ஆனந்தமான மற்றும் மறக்கமுடியாத அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பயண முடிவாக உறுதிப்படுத்தல்
3. சுற்றுலாப் பயணிகளுக்கு எதிரான நடைபெறும் துன்புறுத்தல்கள், வேறு விதமாக கவனித்தல் மற்றும் குற்றச் செயல்களைத் தடுத்தல்

**செயற்பாடு:**

இக் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் சுற்றுலாப் பிரிவுகளுக்கு சவாரி வாகனம், 125 சிசி மோட்டார் வாகனம், கடற்கரை ரோவஸ், விடியோ கெமர, டியிட்டல் கெமர உட்பட்ட ஏனைய உபகரணங்களையும் அலுவலக உபகரணங்களையும் அலுவலகத்தினுள் பயன்படுத்தும் பொருட்களையும் வழங்கல் சுற்றுலா பொலிஸ் பிரிவுகளின் தகவல்கள்

**சுற்றுலா அலுவல்களுக்கான புதிய இடம்( (Hot Spot)** ஆட்டவணை-2.4

| இலக்கம் | மாகாணம் | நிருவாக மாவட்டம் | பொலிஸ் பிரிவு | நிலையம் |
|---|---|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | கொழும்பு | பொலிஸ் நடமாடும் பிரிவு | பொலிஸ் நடமாடும் பிரிவு |
| 2 | மேல் மாகாணம | கழுத்துறை | கழுத்துறை | மொணராகலை |
| 3 | மேல் மாகாணம | கொழும்பு | கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ |
| 4 | மேல் மாகாணம | நீர் கொழும்பு | நீர் கொழும்பு | குருணாகல் |
| 5 | மத்திய | கண்டி | கண்டி | கண்டி |
| 6 | மத்திய | கண்டி | மாத்தளை | சீகிரியா |
| 7 | வட மத்திய | அநுரதபுரம் | அநுரதபுரம் | அநுரதபுரம் |
| 8 | வட மத்திய | பொலநறுவை | பொலநறுவை | பொலநறுவை |
| 9 | கிழக்கு | அம்பாறை | கல்முனை | அருகம்பே/பொத்துவில் |
| 10 | கிழக்கு | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | கல்குடா/ பாசிகுடா |
| 11 | சப்ரகமுவா | கேகாலை | கேகாலை | பின்னவல |
| 12 | தென் | காலி | காலி | ஹிக்கடுவ/நரிகம |

*மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு*

**செயற்படுத்தும் நிறுவனம்**: இலங்கை பொலிஸ் தலைமையகம்
**வரவு- செலவு ஒதுக்கீடு**: 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது
**2017 ஆம் ஆண்டு வரையான செலவினம்** : 41.83 மில்லியன் ரூபா

## 2.5. கொழும்பு சர்வதேச வர்த்தக விழா

**அறிமுகம்**

கொழும்பு சர்வதேச வர்த்தக விழா – 2017 இனை நடாத்துவதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 50 மில்லியன் தொகையினை சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய தொழிற்பாட்டுக் குழு அடங்கியதான சுற்றுலாத்துறைத் தரப்பினர்களின் பங்களிப்புடன் இலங்கை சில்லறை வியாபாரிகளின் சங்கம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் போன்ற நிறுவங்களை இணைத்துக்கொண்டு சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சினால் இச் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

**குறிக்கோள்:**

- தெற்கு ஆசிய வலயத்தில் அதிகமாக காணக் கூடிய வியாபாரப் பொருட் கொள்வனவு செய்யும் சுற்றுலாத்தளமொன்றாக இலங்கையினை மாற்றுதல்.
- வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்யும் இடைத் தரகரொன்றாக பயன்படுத்திக்கொண்டு சில்லறைப் பொருட்களை விற்பனை செய்யும் மத்திய நிலையமொன்றாக இலங்கையினை மாற்றுதல்

**செயற்பாடுகள்:**

- கொழும்பு சர்தேச வர்த்தக விழாவின் விசேட அம்சமான சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2017 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 22 வரை நடைபெற்றது.
- இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பாங்களதேசம் அகிய நான்கு சார்க் வலய நாடுகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விளம்பரங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

**வரவு- செலவு ஒதுக்கீடு**: ரூபா 50 மில்லியன்
**2017 ஆம் ஆண்டு வரையான செலவினம் :** ரூபா 29.50 மில்லியன்
**2018 ஆம் ஆண்டு பொறுப்பு** : ரூபா 5.00 மில்லியன்
**மொத்த செலவினம் :** ரூபா 34.35 மில்லியன்

## 2.6. கவர்ச்சிகரமான உயர் சுற்றுலாத்தளங்களுக்கான பிரசுரங்கள், வழிகாட்டிகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்களை மேம்படுத்தல்

இக் கருத்திட்டத்தின் கீழ், பேராதெனிய தாவரவியல் பூங்கா, கொழும்பு தேசிய நூதனசாலை மற்றும் தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் கீழுள்ள பின்னவல யானைகள் சரணாலயம் போன்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடங்களிலுள்ள சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் முகமாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நோக்கம்:**

- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக அறிவுறுத்தல்கள் சிறிய கையேடு மற்றும் துண்டுப்பிரசுரங்களை மேம்படுத்தல்
- காலாவதியான தகவல்களை மேம்படுத்தல்
- தற்போது ஆங்கில மொழி மட்டும் இருக்கின்ற தகவல்கள் பொருத்தமான மொழிகளில் பெற்றுக்கொள்ளக் கூடியவாறாக மாற்றியமைத்தல்.

### I. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால், ''நூதனசாலைகளுக்காக இடைச் செயற்பாட்டுக் குறிகாட்டியினை தாபித்தல்'' எனும் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்காக ரூ. 2.75 மில்லியன் தொகை பெற்றுக்கொடுத்துள்ளது.

**முன்னேற்றம்:** நூதனசாலையினை தாபிப்பதற்காக 3 டிஜிட்டல் பெனர்களை உள்ளடக்குவதற்கு தேவையான மென்பொருள் விருத்திச் செய்யப்பட்டது.

**II. தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்**

தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தினால், ''யானைகள் சரணாலயத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில், விருந்தாளிகளுக்காக தகவல் முறைமையொன்றை விருத்தி செய்தல்'' எனும் கருத்திட்ட யோசனைக்காக ரூ. 3.5 மில்லியன் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

**முன்னேற்றம்:** தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டிலுள்ள QR குறியீட்டுடனான குறிப்பீட்டினை பெற்றுக்கொடுப்பதன் மூலம் உல்லாசப் பயணிகளுக்கான சுற்றுலா செய்யக் கூடிய இடங்கள் பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும், புதிய படங்கள் அடங்கிய சுற்றுலாப் புத்தகம், பிரசுரங்கள் சுற்றுலாத்துறையினை ஈர்க்கக்கூடியவாறு விருத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளதோடு பொருத்தமான இடங்களில் பொருத்துவதற்கு இடைச் செயற்பாட்டுக்கான நான்கு டிஜிட்டல் பெனல்கள் மற்றும் ஐந்து ஒளியூட்டப்பட்ட பதாகைகள் என்பன ஸ்தாபிபககப்படுள்ளது.

**III. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்:**

''இடைச் செயற்பாட்டு டிஜிட்டல் தகவல் பதாகையினை பொருத்துவதற்கு'' தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு ரூ. 3.5 மில்லியன் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

**முன்னேற்றம்:** முக்கியமான இடங்கள் பற்றிய சுற்றுலாப் பயணிகள் மற்றும் விருந்தினர்களுக்கும் வழிகாட்டும் நோக்குடன் மற்றும் தாவரவியல் பெயர்கள் அடங்கிய பூங்காக்கள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பேராதெனிய அரச தாவரவியல் பூங்காவின் பல்வேறு இடங்களில் டிஜிற்றலிலான பலகைகள் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**வரவு- செலவு ஒதுக்கீடு**: ரூபா 10.00 மில்லியன்
**2017 ஆம் ஆண்டு வரையான செலவினம் :** ரூபா 5.914 மில்லியன்

## 2.7. சுற்றுலா ஹோட்டல்களை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் சலுகை வட்டியுடனான கடன் முறையொன்றை பெற்றுக்கொடுத்தல்

**அறிமுகம்:**

2017 வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம், 10 வருடங்களை விட அதிகமான காலத்தில் செயற்படுத்தப்படுகின்ற சுற்றுலா ஹோட்டல்களின் வசதிகளை நவீன தேவைப்பாடுகள் மற்றும் அதற்கேற்றவாறாக மீண்டும் கட்டியமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காகவும் அவ்வாறான ஹோட்டல்களுக்கு சலுகை வட்டியுடனான கடன் முறையொன்றைக் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. ஹோட்டல் வசதிகளை மீண்டும் சீர்செய்வதற்காக நிதி சார்ந்த உதவிகளை வழங்குவதன் மூலம் ஹோட்டல் துறைக்கு ஒத்துழைப்பினை வழங்குவது இதன் நோக்கமாகும்.

தொடக்கமாக, இக் கருத்திட்டத்திற்கு ரூ. 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், வெள்ள நிவாரண நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டிற்காக 2017 ஆம் ஆண்டில், வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் ரூ. 300 மில்லியன் மீளப் பெறப்பட்டது.

**நோக்கம்:**

I. சுற்றுலா ஹோட்டல்ளை மேம்படுத்துவதன் மூலம் தமது சேவைகளைப் பூர்த்தி செய்து ஹோட்டல்களை ஊக்குவித்தல்.
II. வழங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வகைப்படுத்துவதன் மூலம் பங்காளிகளை அடிப்படையாகக் கொண்டு விஸ்தரிக்கப்பட்ட தேவைப்பாடுகள் பற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஹோட்டல்களுக்கு ஆதரவளித்தல்.
III. தரமான பாதுகாப்பு சேவையொன்றை வழங்குவதன் மூலம், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரித்து சுற்றுலாப் பிரிவில் போட்டித்தன்மையினை அதிகரித்தல்.

**செயற்படுத்தப்படுகின்ற நிறுவனம்**: சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

**முன்னேற்றம்:** இது தொடர்பாக பல கூட்டங்கள் வங்கி மற்றும் அதனுடன் தொடர்புடையோர் கலந்து ஆலோசிக்கபபட்டது , அதன் முடிவில் அமைச்சில் காண்காணிப்பு பிரிவு உருவக்க ஆளணி இன்மை காரணமாக கைவிடப்பட்டது.

**மீளய்வு முதலீடு :** ரூபா. 200 மில்லியன்
**2017 ஆம் ஆண்டு வரையான செலவினம் :** ரூபா 0.18 மில்லியன்

# அத்தியாயம் 3

## நிதி மற்றும் கணக்கீட்டுப் பிரிவு

1. பொருத்தப்பாடு சட்டத்தின் கீழ் பயன்பாட்டுத் மொத்த ஒதுக்கீடுகள் 2017
2. மொத்த வழங்குதல்
3. மொத்த வழங்குதல் திட்டங்கள்
4. மொத்த வழங்குதல் மீது பயன்பாடு
5. சொத்துக்கள் மேலாண்மை
6. அரச சேவையாளர்களின் "பி" முற்பணக்கணக்கு
7. பின்வருமாறு ஆண்டில் கடன் மற்றும் அட்வான்ஸ் வழங்குதல்

# 3. நிதிச் செயற்பாடு – 2017

## 3.1 பொருத்தப்பாடு சட்டத்தின் கீழ் பயன்பாட்டுத் மொத்த ஒதுக்கீடுகள் – 2017

அட்டவணை:3.1

**தலைமை இல: 159**

**Rs.'000**

| விபரம் | திட்டம் - 01 செயல்பாட்டு நடவடிக்கைகள் | | | | திட்டம் - 02 செயல்பாட்டு நடவடிக்கைகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | திட்டம் - 01 அமைச்சு | | திட்டம் - 02 நிர்வாகம் மற்றும் சேவைகள் அமைத்தல் | | திட்டம் - 03 சுற்றுலா ஊக்குவிப்பு | | | |
| | மொத்த ஒதுக்கீடுகள் | உண்மையான செலவினம் | மொத்த ஒதுக்கீடுகள் | உண்மையான செலவினம் | மொத்த ஒதுக்கீடுகள் | உண்மையான செலவினம் | மொத்த ஒதுக்கீடுகள் | உண்மையான செலவினம் |
| மீண்டு வரும் செலவு | | | | | | | | |
| • பணியாளர் ஊதியம் | 22,938 | 21,182.54 | 31,851 | 31,849.59 | - | - | 54,789 | 53,032.13 |
| மற்ற மீண்டு வரும் செலவு | 27,519 | 21,663.76 | 47,575 | 41,265.02 | 60,184 | 35,158.04 | 135,278 | 98,086.82 |
| **கூட்டுத்தொகை** | **50,457** | **42,846.30** | **79,426** | **73,114.61** | 60,184 | 35,158.04 | **190,067** | **151,118.95** |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | 200 | 199.93 | 1,545 | 877.11 | - | - | 1,745 | 1,077.04 |
| 2002 | 500 | - | 500 | 425.93 | - | - | 1,000 | 425.93 |
| 2003 | 1,800 | 1,793.69 | 1,000 | 899.29 | - | - | 2,800 | 2,69298 |
| 2101 | 43,000 | 39,783.85 | - | - | - | - | 43,000 | 39,783.85 |
| 2102 | 1,000 | 999.99 | 3,711 | 3,708.36 | - | - | 4,711 | 4,708.35 |
| 2103 | 500 | 499.89 | - | - | - | - | 500 | 499.89 |
| 2401 | - | - | 2,044 | 829.02 | - | - | 2,044 | 829.02 |
| 2502 | - | - | - | - | 868,000 | 223,635.88 | 868,000 | 223,635.88 |
| மொத்தம் | **47,000** | **43,277.34** | **8,800** | **6,739.7** | **868,000** | **223,635.88** | **923,800** | **273,652.92** |
| மொத்தம் | **97,457** | **86,123.65** | **88,226** | **79,854.31** | **928,184** | **258,793.92** | **1,113,867** | **424,771.8** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

## 3.2. சாராம்சம்

**மொத்த வழங்குதல்** அட்டவணை:**3.2**

| விபரம் | கருத்திட்டம் – 01 | கருத்திட்டம் – 02 | மொத்தம் |
|---|---|---|---|
| | நிர்வாகம் நடவடிக்கைகள் | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| மீண்டு வரும் செலவு | 129,883.00 | 60,184.00 | 190,067.00 |
| மூலதனச் செலவு | 55,800.00 | 868,000.00 | 923,800.00 |
| மொத்தம் | **185,683.00** | **928,184.00** | **1,113,867.00** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

### 3.3. மொத்த வழங்குதல் திட்டங்கள் அட்டவணை:**3.3**

**ரு.000**

| விபரம் | மீண்டு வரும் செலவு (ரு.மில்.) | மூலதனம் (ரு.மில்.) | மொத்தம் (ரு.மில்.) |
|---|---|---|---|
| அமைச்சு அலுவலகம் | 50,457 | 47,000 | 97,457 |
| நிர்வாகம் | 79,426 | 8,800 | 88,226 |
| சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் | 60,184 | 868,000 | 928,184 |
| மொத்தம் | **190,067** | **923,800** | **1,113,867** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

### 3.4. மொத்த வழங்குதல் மீது பயன்பாடு அட்டவணை:**3.4**

| விபரம் | **பிரிவு (ரு.மில்.)** | **பயன்பாட்டு (ரு.மில்.)** | **பயன்பாட்டு (%)** |
|---|---|---|---|
| மீண்டு வரும் செலவு – நடவடிக்கைகள் | 129,883 | 115,960.90 | 89.28 |
| - அபிவிருத்தி நடவடிக்கைகள் | 60,184 | 35,158.04 | 58.42 |
| மூலதனச் – நடவடிக்கைகள | 55,800 | 50,017.05 | 89.64 |
| - அபிவிருத்தி நடவடிக்கைகள் | 868,000 | 223,635.87 | 25.76 |
| மொத்தம் | **1,113,867** | **424,771.88** | **38.13** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

## சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்கள் நிர்வகிக்கப்படும் மற்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன 31 டிசம்பர் 2017 விதிமுறை மற்றும் கையகப்படுத்துதல் மொத்த மதிப்பு படி. ரூ 44,992,099.12 பின்வருமாறு விவரங்கள் உள்ளன

அட்டவணை: **3.5**

| விபரம் | **தொகை (ரூ.)** |
|---|---|
| வாகனங்கள் | 39,783,846.20 |
| அலுவலக உபகரணங்கள் | 140,166.81 |
| கணினி உபகரணங்கள் | 2,953,698.48 |
| மின் உபகரணம் | - |
| தொடர்பாடல் உபகரணம் | 170,000.00 |
| மரச்சாமான்கள் | 1,944,387.63 |
| **மொத்தம்** | **44,992,099.12** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

### 3.5. அரச சேவையாளர்களின் "பி" முற்பணக்கணக்கு

நிதிஒதுக்கீட்டுச் சட்டம் 2017 மற்றும் ஆண்டு இறுதியில் முன்னேற்றம் படி முன்கூட்டியே கணக்கிற்கு வரம்பு ,

அட்டவணை: 3.6

| விபரம் | **அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ருபா.)** | **ஆண்டு முடிவு முன்னேற்றம் (ருபா.)** |
|---|---|---|
| அதிகபட்ச பற்று எல்லை | 3,800,000.00 | 3,745,559.00 |
| குறைந்தபட்ச கடன் வரம்பு | 1,000,000.00 | 1,880,610.45 |
| அதிகபட்ச பற்று இருப்பு வரம்பு | 15,000,000.00 | 7,926,056.46 |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

### 3.6. பின்வருமாறு ஆண்டில் கடன் மற்றும

அட்டவணை: 3.7

| **கடன் வகை** | **தொகை (ரூ.)** |
|---|---|
| இடர் கடன் | 2,810,301.00 |
| **விழா** முற்பணம் | 420,000.00 |
| **சிறப்பு** முற்பணம் | 80,000.00 |
| **சைக்கிள் கடன்** | 435,258.00 |
| மொத்தம் | **3,745,559.00** |

மூலம்: கணக்கு பிரிவு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

# அத்தியாயம் 4

## உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு

## உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவானது நி. பி. 134 (1) இணங்க ஸ்தாபிக்கப்பட்டு, அமைச்சுச் செயலாளரின் நேரடிப் பொறுப்பில் 2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் செயற்படத் தொடங்கியது. திறைசேரியின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழி நடத்தலுடன் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின்படி உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

2017 ஆண்டுக்கான அமைச்சின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு 5 கணக்காய்வு வினாக்கள் தொடுக்கப்பட்டது. கணக்காய்வின் போதும், அறிக்கைகளிலும் காணப்பட்ட பிழைகள் சம்பந்தமாக கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தின் போதும் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதும் அலுவலகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு பிழைகள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ கணக்காய்வுச் செயற்குழுக் கூட்டம் பின்வரும் திகதிகளில் நடைபெற்றது.

1ஆம் காலாண்டு 30.01.2017

2ஆம் காலாண்டு 24.04.2017

3ஆம் காலாண்டு 01.08.2017

4ஆம் காலாண்டு 07.11.2017

இந்த அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் இச் செயற்குழுகூட்டத்துக்கு அழைக்கப்படுவதுடன், இச் செயற்குழு வினைத்திறனுடன் இயங்குவதற்கு தனிப்பட்ட அவதானம் செலுத்தப்படுவதோடு, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கட்ட உயர் அவதானம் செலுத்த வேண்டிய நிதி ஒழுங்குகள் சம்பந்தமான கணக்காய்வு அறிக்கைக்கு உரிய பரிகாரம் காணப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கணக்காய்வு நாயகத்தினால் எழுப்பப்படும் கணக்காய்வு வினவல்களுக்கு இணைப்பு அலுவலாக செயற்படுவதும் பதில்களை முன்வைப்பதுமாகும். 2017 ஆம் ஆண்டு இந்த அமைச்சிடம் வினவப்பட்ட 12 கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

பொது கணக்குக் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு ஆகியவற்றின் கூட்டங்களுக்கான இணைப்பாளராக செயற்படுவதுடன், 2015 ஆண்டுக்கான அமைச்சின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய முன்னேற்ற அறிக்கை மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2014, 2015 ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கை அகியவற்றுக்கான பதில்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் மூன்று மொழிகளிலும் பதில்கள் வழங்கப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கான பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகளுக்கான பதில்கள் அனுப்பிவைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, கௌரவ அமைச்சர் அவர்களினால் கேட்கப்பட்ட 6 புலனாய்வு அறிக்கைகளுக்கும் ஜனாதிபதி செயலகத்தினால் கேட்கப்பட்ட 1 அறிக்கைக்கும் மற்றும் பிரதமர் அலுவலகத்தினால் கேட்கப்பட்ட 1 அறிக்கைக்கும் குறித்த காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தொகுப்பு

உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை ஒரு பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகும். ஆனால் தற்பொழுது ஒரு பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளர்.மட்டும் கொண்டு இயங்குகிறது.